பக்கங்கள் : பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 29 திங்கட்கிழமை (11.04.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :136

# பொதுக் கட்டமைப்புக்கு இணங்குங்கள்!

## இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் சர்வதேச சமூகம் கடும் வற்புறுத்தல்

கொழும்பு,ஏப்ரல்11

**ஆழிப்பேரலை அழிவுகளினால் ஏற்பட்ட பாதிப்புக்களிலிருந்து மக்களை மீட்பதற்கான பணியை முன்னெடுக்கவேண்டிய பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதில் அதிக சிரத்தை காட்டுங்கள். இயன்றவரை விட்டுக்கொடுத்து - இணங்கிப்போய் - விரைந்து அதற்கான உடன்பாட்டை எட்டுங்கள்.**

**- இவ்வாறு சம்பந்தப்பட்ட தரப்புக்களான இலங்கை அரசையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் கடுமையாக வற்புறுத்தியிருக்கின்றது சர்வதேச சமூகம்.**

ஆழிப்பேரலை தாக்கி மூன்றரை மாதங்கள் கடந்துவிட்டன. இன்னமும் பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் நடவடிக்கை பயன் தரவில்லை. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாகியிருக்கும் மக்களின் அடிப்படை - அவசர - அவசிய - தேவைகள் வரும் மாரி காலத்துக்கு முன்னராவது நிறைவு செய்யப்பட வேண்டும். காலம் ஓடிக்கொண்டிருக்கின்றது. இன்னமும் காலம் தாழ்த்தினால் இப்பணிகளை மாரி ஆரம்பமாவதற்கு முன்னர் பூர்த்திசெய்ய முடியாமல் போய்விடும். ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற மக்கள் மழை வெள்ளத்தில் மேலும் மோசமான நிலையை எதிர்கொள்ள வேண்டி நேரும். இந்த ஆபத்தைக் கருத்தில் கொண்டாவது

(02ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இன்று எழுச்சிப் பேரணி

வவுனியா.ஏப்.11

அமைதித் தீர்வுக்கான பேச்சுக்களை உடன் ஆரம்பிக்கக் கோரியும், ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்துக்கான பொதுக்கட்டமைப்பை உடன் ஏற்படுத்தக் கோரியும் வவுனியாவில் இன்று திங்கட்கிழமை 84 அமைப்புகள் இணைந்து பெரும் எழுச்சிப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளன.

வவுனியா வெகுஜன அமைப்பு இது குறித்து அறிவித்துள்ளது.

இன்று காலை 10 மணிக்கு வவுனியா மகாவித்தியாலய முன்றிலில் இருந்து ஆரம்பமாகும் பேரணி வவுனியா நகரசபை மைதானத்தை வந்தடையும். அங்கு எழுச்சிக்கூட்டம் நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தில் வன்னி நாடாளுமன்ற

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஏறாவூர் பொலீஸ் சுற்றிவளைப்பு ரி-56 துப்பாக்கியுடன் இளைஞர் கைது!

ஏறாவூர்.ஏப்.11

ரி-56 ரக துப்பாக்கி வைத்திருந்த இளைஞர் ஒருவரை சனியன்று ஏறாவூர் மிச் நகரில் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலீஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலொன்றின் அடிப்படையில் சனிக்கிழமை அதிகாலை 5.45 மணியளவில் பொலீஸார் அப்பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் மேற்கொண்டனர்.

இந்தத் திடீர்த் தேடுதல் நடவடிக்கையின் போதே இளைஞர் கைதுசெய்யப்பட்டார் என ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர்.

இரண்டு மகஸின்கள் மற்றும் 60 தோட்டாக்கள் என்பனவும் இந்த இளைஞரிடமிருந்து பொலீஸாரினால் மீட்கப்பட்டுள்ளன. சுவர் ஒன்றுக்குள் மிகவும் சூட்சுமமான முறையில் இந்த ஆயுதம் ஒளித்து வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட இளைஞருக்கும் சட்ட விரோத ஆயுதக் குழுக்களுக்குமிடையில் ஏதேனும் தொடர்புகள் உள்ளனவா என்பது

(14ஆம் பக்கம் பார்க்க)

## தில்லைக் கூத்தனுக்கு நாட்டுப்பற்றாளர் கௌரவம்



கிளிநொச்சி.ஏப்.11

கடந்த வெள்ளியன்று கொழும்பில் காலமான தமிழ்த்தேசியப் பணிக்குழுவின் தலைவர் இளையதம்பி நடராஜாவுக்கு (தில்லைக்கூத்தன்) விடுதலைப் புலிகள் நாட்டுப்பற்றாளர் கௌரவம் வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

இதுவிடயமாக நேற்றிரவு விடுதலைப் புலிகளின் அரசியல்துறை விடுத்த செய்திக்குறிப்பு வருமாறு:-

தமிழீழ தாயகத்தையும், தமிழ்த்தேசியத்தையும் தமிழீழத் தேசியத் தலைவரையும் பற்றோடு மதித்து வாழ்ந்த ஒரு நாட்டுப்பற்றாளரை இழந்து விட்டோம்.

தமிழினம் விடுதலைபெற வேண்டும் என்ற உயரிய உணர்வோடு எப்போதும் இயங்கிவந்தவர் நாட்டுப்பற்றாளர் இளையதம்பி நடராஜா (தில்லைக்கூத்தன்) அவர்கள். எத்தகைய இடையூறுகள், அச்சுறுத்தல்கள் எல்லாம் வந்த போதும் தனது

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தோனேஷியாவில் மீண்டும் பூமியதிர்ச்சி

சுமாத்திரா.ஏப்.11

இந்தோனேஷியாவின் சுமாத்திரா தீவு அருகில் நேற்றும் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவு கோலில் 6.7 புள்ளியாக அது பதிவானது.

சேத விவரங்கள் உடனடியாக வெளிவரவில்லை. எனினும் கரையோரப் பிரதேசத்தில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் - பூமியதிர்ச்சியை அடுத்து சுமாத்திராத் தீவில் படாங் பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்த்தப்பட்டனர் என்று இணையத்தளம் ஒன்று நேற்றிரவு செய்தி வெளியிட்டது. (எ)

## அமைதி முயற்சிகள் குறித்து பிராந்திய செயலமர்வுகள்

### தனது கட்சியினருக்கு சு.க. நடத்துகிறது.

கொழும்பு. ஏப்.11

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண. மீள் கட்டுமானப் பணிகளுக்காக விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பொதுக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவது தொடர்பிலும், அமைதி முயற்சிகளை முன்னெடுக்கும் விடயம் குறித்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட, பிரதேச அமைப்பாளர்களை அறிவுறுத்துவதற்காக இருநாள் செயலமர்வுகளை நடத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பணிப்புரை விடுத்திருக்கிறார்.

இதன்படி எதிர்வரும் 23மற்றும் 24ஆம் திகதிகளில் நாட்டின் 18மாவட்டங்களில் இந்தச் செயலமர்வுகள் நடைபெறவிருக்கின்றன. அந்தந்த மாவட்டங்களைச் சார்ந்த அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் கூடுதலான பங்களிப்பைச் செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கும், அதனூடாக அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கும் ஏற்கனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது. பிராந்திய ரீதியில் இதற்குள்ள பிரதிபலிப்பு என்ன என்பது பற்றி அறிந்து கொள்வதற்காகவே இந்தச் செயலமர்வு நடத்தப்படுவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-க)

## சுனாமியில் இறந்த காரைதீவு மாணவிக்கு பத்துப் பாடங்களிலும் 'ஏ'

ஆழிப்பேரலையில் சிக்கிப் பலியான மாணவியொருவருக்கு பத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி(ஏ) கிடைத்துள்ளது.

காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி மாணவியான தவராஜா விசித்ரா என்பவரே இந்தப் பெறுபேற்றைப் பெற்றுள்ளார்.

ஜி.சீ.ஈ. (சா.த) பரீட்சை எழுதி மூன்று நாள்களில் இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தில் இவர் பலியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பரீட்சைப் பெறுபேற்றைப் பார்த்ததும் பெற்றோர், உறவினர் , அதிபர் உள்ளிட்ட அனைவரும் சோகத்தில் ஆழ்ந்தனர். (எ-84)

## மூதூரில் பிடிபட்ட சிப்பாய் புலிகளால் விடுவிப்பு

திருகோணமலை.ஏப்.11

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான மூதூர் கிழக்கில் நேற்றுமுன்தினம் ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்ட சிப்பாயை விடுதலைப் புலிகள் நேற்று விடுதலை செய்தனர்.

கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஆழிப்பேரலை வதந்தியால் கல்லடியில் நேற்றிரவு பதற்றம்

பட்டிருப்பு.ஏப்.11

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்படப் போகிறது என்று பரவிய வதந்தியால் மட்டக்களப்பு கல்லடியில் நேற்றிரவு 8.00 மணியளவில் மக்கள் அல்லோலகல்லோலப்பட்டுப் பதறி ஓடினர்.

அந்த நேரத்தில் காற்றின் வேகம் அதிகரித்திருந்தது. மின் விநியோகமும் தடைப்பட்டது. இதனால் பொதுமக்கள் பீதி அதிகரிக்க தமது பொருள்களைச் சுமந்துகொண்டு ஓடினர்.

இந்த விடயம் தொடர்பாக மட்டக்களப்பு வளிமண்டலவியல் திணைக்களப் பொறுப்பாளர் எஸ்.சூரியகுமாரிடம் தொடர்புகொண்டு கேட்ட போது -

இந்தோனேஷியாவில் சிறிய அளவில் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. இதனால் பாதிப்பு இல்லை. அத்தோடு சூறாவளி ஏற்படக் கூடிய அபாயம் ஏதும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார். (எ-க-12)

## பூநகரில் காயமடைந்த துணைப்படை வீரரை திருமலைக்கு எடுத்துவர படையினர் தடை

திருகோணமலை.ஏப்.11

திருகோணமலை. பூநகரிலுள்ள விடுதலைப் புலிகளின் சோதனைச்சாவடி மீது கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை நடத்தப்பட்ட தாக்குதலில் படுகாயமடைந்த துணைப்படை வீரரை சிகிச்சைக்காக திருகோணமலை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்வதற்கு இராணுவத்தினர் பெரும் தடைகளை ஏற்படுத்தினர் என்று கூறப்படுகின்றது.

எனினும் பெரும் இழுபறிகளுக்குப் பின்னர் நேற்று பிற்பகல் அவரை திருகோணமலை நகருக்குள் கொண்டு வருவதற்குப் படையினர் அனுமதித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த தாக்குதலில் புலிகளின் துணைப்படை வீரரான குட்டி என்பவர் படுகாயமடைந்தார். அவரது நிலைமை மோசமடைந்ததால் அவரைத் திருகோணமலை நகர வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கு நேற்று முன்தினம் இரவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் சாவடியைத் தாக்கிய மூவர் சிங்களம் பேசினார்கள்

### மனிதக் கேடயங்களாகப் பிடிக்கப்பட்ட வேட்டைக்காரர்கள் தகவல்

திருகோணமலை.ஏப்.11

திருகோணமலை, பூநகரிலுள்ள விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடி மீது கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை தாக்குதல் நடத்தியவர்களில் மூவர் சிங்கள மொழியில் சரளமாகப் பேசினார்கள் என்றும் -

அவர்கள் இராணுவச் சீருடை அணிந்திருந்தார்கள் என்றும் - தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்தத் தாக்குதலை நடத்துவதற்கு அவர்களால் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தப்பட்டார்கள் என்று கூறப்படும் வேட்டைக்காரர்கள் இருவர் இந்தத் தகவல்களைத் தெரிவித்துள்ளனர்.

மஹிந்தபுர இராணுவ முகாமுக்குப் பின்புறமாக அமைந்திருக்கும் பூநகர் காட்டுப்பகுதியில் வேட்டையாடுவதற்காக கடந்த வியாழக்

(14ஆம் பக்கம் பார்க்க)




# சுதேசிய கொண்டாட்ட விழாவின் கலை நிகழ்வுகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.11

அரியாலை, 86ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவையொட்டிய கலை நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின்றன.

விழாத் தலைவர் க.மயில்வாகனத்தின் தலைமையில் நாளை இரவு 7.30 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அமரர் விஸ்வநாதன் அரங்கில் நடைபெறவுள்ள நிகழ்வில், சிறப்பு விருந்தினர்களாக அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத் தலைவர் சோ. சிவசுந்தரம், அரியாலை சனசமூக நிலைய தலைவர் ச.த.கணநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.

மங்கள இசை. மங்கள விளக்கேற்றல், அக வணக்கம், தேவாரம் என்பவற்றைத் தொடர்நது தலைமையுரை இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து 86ஆவது சுதேசிய திருநாள்கொண்டாட்ட விழாவையொட்டி நடத்தப்பட்ட கலைப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இடம்பெறும். பரிசில்களை விழாத்தலைவர் க.மயில்வாகனம் வழங்குவார்.

சிறப்பு விருந்தினர்களின் உரைகளைத் தொடர்ந்து அரியாலை கலைவாணி சனசமூக நிலையத்தினரின் 'அவசரத்தால் வந்த அவஸ்தை', கோப்பாய் ஆசிரிய கலாசாலையினரின் 'தமிழன் கனவு' ஆகிய நாடகங்களும், இசை நிகழ்வும் நடைபெறும்.

தொடர்ந்து, புத்தாண்டு தினத்தன்று அரியாலை சனசமூக நிலையத்தில் விளையாட்டு விழா, கலைவிழா என்பன நடைபெறும்.(எ-12)

# தொழில்நுட்பக் கல்லூரி பொறியியல்துறை மாணவர் விரிவுரையைப் பகிஷ்கரித்தனர்

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் பொறியியல்துறை இறுதிவருட மாணவர்கள் நேற்று தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்குரிய சகல விரிவுரை வகுப்புக்களும் ஒழுங்காக நடைபெறவேண்டும் என்றும் -

பாடநெறிகளுக்குத் தகுதியான ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும் என்றும் கோரி மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டது.

நேற்றுக்காலை தொழில்நுட்பக் கல்லூரி முன்பாக ஒன்றுகூடிய மாணவ, மாணவிகள் தமது கோரிக்கைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்றும் கோஷமிட்டனர்.

இதனையடுத்து ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்களுடன் பேச்சுநடத்திய அதிபர் தொழில்நுட்பக் கல்லூரியின் தற்போதைய நிலைப்பாட்டை விளக்கினார்.

மாணவர்களின் ஆர்ப்பாட்டம் தொடர்பாக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணன் மற்றும் பேரவைப் பிரதிநிதி குகன் ஆகியோரும் அதிபருடன் சந்திப்பு ஒன்றை நடத்தினர்.

மாணவர்களின் கோரிக்கைகளுக்கு மாற்றுவழி செய்து தருவதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து அந்த இடத்திலிருந்து மாணவர்கள் கலைந்துசென்றனர். சுமார் மூன்று மணிநேரம் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (எ-7-86)

*ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறு*

# 30ஆயிரம் பேர் எந்தவொரு பாடத்திலும் சித்தியடையவில்லை எனத் தகவல்

கொழும்பு,ஏப்.11

கடந்த வாரம் வெளியான ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை முடிவுகளின்படி அந்தப் பரீட்சைக்குத் தோற்றிய 3 லட்சத்து 42 ஆயிரத்து 63 பரீட்சார்த்திகளுள் சுமார் 30 ஆயிரம் பேர் சகல பாடங்களிலும் சித்தியடையவில்லை என பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏ.மகிந்த விஜேசிறி கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்களப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

வெளியிடப்பட்டுள்ள பெறுபேறுகளுக்கு அமைய உயர்தர வகுப்புக்களில் பயிலத் தகுதி பெற்றுள்ளோர் 45.04 வீதமாகும். மொத்தப் பெறுபேறுகளுக்கு அமைய நூற்றுக்கு 54.06 வீதமானோர் சித்தியடையவில்லை.

இம்முறை வெளியாகியுள்ள பெறுபேறுகளுக்கு அமைய கடந்த ஆண்டுகளை விட இம்முறை கணிதம் மற்றும் ஆங்கில பாடங்களில் சித்தியடைந்தோரின் எண்ணிக்கை 13 வீதமாக அதிகரித்துள்ளதை விசேடமாகக் குறிப்பிடவேண்டும் - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-206)



சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சியைச் சேர்ந்த 58 மாணவர்களுக்கு நேற்று சைக்கிள்கள் வழங்கப்பட்டன. தமிழர் சமூக, பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் சுவிஸில் வசிக்கும் ஈழத்தமிழர் ஒருவர் இந்தச் சைக்கிள்களை அன்பளிப்புச் செய்திருந்தார். வடமராட்சியில் உள்ள சுனாமி அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் நடைபெற்ற இது தொடர்பான நிகழ்வில் சுவிஸ் வாழ் ஈழத்தமிழர், வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பன், மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் மாணவர்களின் பெற்றோர்களிடம் சைக்கிள்களைக் கையளிப்பதைப் படங்களில் காணலாம். *(படங்கள் : சி.சுந்தரலிங்கம், கரவெட்டிச் செய்தியாளர்)*

# பொதுக் கட்டமைப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரைந்து ஒரு முடிவுக்கு வர சம்பந்தப்பட்ட தரப்புகள் முன்வரவேண்டும் - இப்படி சர்வதேச சமூகம் வலியுறுத்துவதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

தற்போது ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்திருக்கும் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவிடம் சர்வதேச பிரதிநிதிகள் இந்தவிடயத்தை அதிகம் வலியுறுத்தினர் என்று தெரிகிறது.

"இது இடைக்கால நிர்வாக விடயம் அல்ல; நிரந்தரத் தீர்வுக்கான முன்னேற்பாடும் அல்ல. இந்த விவகாரத்தில் இறைமை சம்பந்தமான விடயத்தை இழுபறிக்குள்ளாக்குவது பொருத்தமற்றது. எந்த விட்டுக்கொடுப்புக்களைச் செய்தாவது பொதுக்கட்டமைப்பு விரைந்து ஏற்படுத்துவதை உறுதிப்படுத்துங்கள்" - என்று பல நாடுகளின் உயர் மட்டப் பிரதிநிதிகள் ஐரோப்பியச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட புலிகளின் அரசியல் விவகாரக் குழுவை வற்புறுத்தினர் என்று தெரிகின்றது.

இதேபோன்ற அழுத்தம் அரசுத் தரப்புக்கும் அதிக அளவில் சர்வதேச சமூகத்தினால் தரப்பட்டிருக்கின்றது எனத் தெரிகின்றது.

"பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தாமல் ஆழிப்பேரலை அழிவுக்கு நிவாரணம் ஏதும் சர்வதேச சமூகத்திடமிருந்து கிடைக்காது. அதனை அரசு உணர்ந்துகொண்டு புலிகளுடன் ஓர் இணக்கத்துக்கு வந்து பொதுக் கட்டமைப்பை விரைந்து ஏற்படுத்தவேண்டும்" - என்று சர்வதேச சமூகம் அரசுத் தரப்பை வற்புறுத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதற்கிடையில் -

தனிப்பட்ட பயணம் ஒன்றை மேற்கொண்டு சுவிற்ஸர்லாந்து சென்றிருந்த விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தையும் அவரது துணைவியார் அடேல் பாலசிங்கத்தையும் கடந்த புதனன்று ஜெனீவாவில் வைத்து இலங்கை சமாதானப் பணிகளின் அனுசரணையாளர்களான நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் சந்தித்துப் பேசினார். இருவரும் சுமார் இரண்டு மணி நேரம் விரிவான பேச்சுக்களில் ஈடுபட்டனர் எனத் தெரியவந்தது.

பொதுக் கட்டமைப்பை உருவாக்குதல், இனப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வைக் காண்பதற்கான பேச்சுக்களை முன்னெடுத்தல் மற்றும் தற்போதைய அரசியல் நிலைமை ஆகியவை குறித்து இருவரும் பேசினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த வாரம் கொழும்பு வரும் சொல்ஹெய்ம், பொதுக் கட்டமைப்புக்கான இணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியாக கொழும்பில் இலங்கை அரசுத் தரப்புத் தலைவர்களுடனும், கிளிநொச்சியில் புலிகளின் தலைவர்களுடனும் பேச்சு நடத்தவிருக்கின்றார் எனத் தெரியவருகின்றது.

தற்போது ஐரோப்பிய நாடுகளிலும் மற்றும் தென்னாபிரிக்காவிலும் சுற்றுப்பயணம் செய்து வரும் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர், சொல்ஹெய்ம் கிளிநொச்சி வரமுன்னர் வன்னி திரும்பிவிடுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தலைவர் பிரபாகரனுடன் ஆலோசனை நடத்திய பின்னர் பொதுக் கட்டமைப்புத் தொடர்பான விடயத்தில் தமது தற்போதைய நிலைப்பாட்டை கிளிநொச்சியில் வைத்து எரிக் சொல்ஹெய்முக்கு தமிழ்ச்செல்வன் தெரிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ-க)

*ஐ.ஐ.எஸ். கணனி நிறுவனத்தில்*

# கற்கை நெறி ஆரம்ப நிகழ்வும் வழிகாட்டல் கருத்தரங்கும்

யாழ்ப்பாணம்,ஏப்.11

ஐ.ஐ.எஸ். நிறுவனம் இலங்கை சிலிங்கோ நிறுவனத்தின் உயர் கல்வி செயற்பாட்டிலுள்ள ஐ.சி.பி.ரி. நிறுவனத்துடன் இணைந்து ஆரம்பிக்கவுள்ள தொழில் நிர்வாகத்தின் முதுமாணிக் கற்றைநெறியின் ஆரம்ப நிகழ்வும் வழிகாட்டல் கருத்தரங்கும் எதிர்வரும் 16ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு ஐ.ஐ.எஸ். நிறுவனத்தில் நடைபெறவுள்ளன.

ஐ.ஐ.எஸ். நிறுவன இயக்குநர் எஸ்.விக்னேஷ் தலைமயில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மனிபல் பல்கலைக்கழகத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள், ஐ.சி.பி.ரி., நிறுவனத் தலைவர் ஜெகத் அல்விஸ் மற்றும் பொது முகாமையாளர் மொகான் பத்திரன நிறுவனத்தின் பிரதிநிதிகளான அனுரா கமகே, நிரோஜன் மடமிற்றி கே ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

முதுமாணிக் கற்கைநெறி தொடர்பாக ஆர்வமுள்ளோரை இதில் கலந்து பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(எ-204)

## வல்லிபுர ஆழ்வார் ஆலய இராச கோபுரத்துக்கு நேற்று அடிக்கல் நடுகை

கரவெட்டி,ஏப்.11

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய மேற்கு வாசலில் 31அடி உயரம் 3 தளங்களையும் கொண்டதாக நிர்மாணிக்கப்படவுள்ள இராச கோபுரத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் சமயக் கிரியைகளுடன் நடைபெற்றது.

வல்லிபுரக் கோயில் அறங்காவல் குழுத் தலைவர் இ.அன்னலிங்கம் கோபுரத்துக்கான அடிக்கல்லை நட்டுவைத்தார்.

30 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இராச கோபுர வேலைகளை தமிழ் நாடு திருவெண்காடு ஆசாரியார்கள் மேற்கொள்ளவுள்ளனர். (எ-70)

## சேவைநலன் பாராட்டு

சுழிபுரம்,ஏப்.11

மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலையில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெறவுள்ள திருமதி ரதிதேவி சோதிலிங்கத்தின் சேவைநலன் பாராட்டுவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு வித்தியாலய அரங்கில் நடைபெறுவுள்ளது.

உப அதிபர் சி.சிவமலர் தலைமையில் நடைபெற்வுள்ள இந்நிகழ்வில் 'சைவப் பிரகாசம்' சஞ்சிகை வெளியீடும் இடம்பெறும்.

இந்நிகழ்வில் வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், சங்கானைக் கோட்டக்கல்வி பணிப்பாளர் நா.சண்முகசுந்தரம், வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி அதிபர் ந.சபாரத்தினசிங்கி மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் ஆகியோர் கலந்துகொண்டு அதிபரின் சேவையைப் பாராட்டி வாழ்த்துரைகள் வழங்குவர்.

(எ-28-204)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# அஸ்தமனத்தின் அறிகுறியா இவை?

தென்னிலங்கையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசியல் அதிகாரப்பிடி மெல்ல மெல்ல தளர்ந்து வருவதாக அரசியல் களமுனைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவர் தற்போது அலங்கரிக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவிக்குரிய பதவிக்காலம் அந்தத்தை நெருங்க நெருங்க, அவரின் சர்வாதிகாரப் போக்குப் பிடியும் மெல்ல மெல்லத் தளரும் சூழ்நிலையே உருவாகிவருகிறது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

ஏற்கனவே, அவரது அரசுக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பிக்கும் அவருக்கும் இடையிலான உறவுநிலை மோசமாகச் சீர்கெட்டிருக்கின்றது.

அதிகாரப்பகிர்வு தொடர்பாகவும் அது சம்பந்தமான விடயங்கள் குறித்தும் ஜனாதிபதி சந்திரிகா வேலையில்லாமல் வெட்டிப் பேச்சுப் பேசுகின்றார் என்றும், உண்மைக்கு மாறான கருத்துக்களை வெளியிடுகின்றார் என்றும் அவரது பெயரைக் குறிப்பிடாமலேயே பகிரங்கமாக அவரை விமர்சிக்கின்றார் ஜே.வி.பியின் தலைவர்.

அவரோ, அமைதி முயற்சிகள் தொடர்பான ஜே.வி.பி. போக்கைக் கண்டித்து அக்கட்சியினரின் பெயரைக் குறிப்பிடாமல் அவர்களை "முட்டாள்கள் மடையர்கள்" என்று சாடுகின்றார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் - சந்திரிகாவைக் கவனிக்காமல் - அவரது சகோதரரான அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவை நிறுத்துவது குறித்து ஜே.வி.பி. தலைவர்கள் மும்முரமாகத் திட்டம் தீட்டுகின்றார்கள்.

மறுபுறம் ஜனாதிபதிக்கும் அடுத்த ஜனாதிபதியாக வரத்துடிக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் கருத்து வேறுபாடு முற்றிவிட்டதாகத் தகவல். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கே தெரியாமல் அவரின் கீழுள்ள நெடுஞ்சாலைகள் அமைச்சின் கணக்கு, வழக்குகளைக் கணக்காய்வு செய்து, மஹிந்த ராஜபக்ஷவை ஊழல் குழி என்ற குற்றச்சாட்டுக்குள் விழவைத்து, அவரை அடக்கலாம் எனத் திட்டமிடுகின்றார் அரசுத் தலைவி.

இதேசமயம் இன்னொருபுறம் ஜனாதிபதிக்கும் அவருக்கு நெருங்கிய சகா எனக் கருதப்படும் அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் இடையில் ஊடகத்துறை அமைச்சுத் தொடர்பான விடயத்தில் இழுபறி.

மங்களவை மீறி, அவரது அமைச்சுக்குள் அளவுக்கு அதிகமாகத் தலையிட்டு, ஜனாதிபதி அதிகாரம் பண்ணுவதா வெறுத்துப் போயிருக்கும் மங்கள ஆரம்பத்தில் அடக்கித்தான் - அடங்கித்தான் - வாசித்தார். ஆனால், இப்போது ஜனாதிபதியுடன் முரண்டுபிடிக்கும் போக்கை அவரும் ஆரம்பித்து விட்டார் எனத் தெரிகின்றது. ஊடகத்துறை தொடர்பாக ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஊடகத்துறை அமைச்சர் என்ற ரீதியில் தாம் மேற்கொள்ளும் பதில் காய் நகர்த்தல்கள் மூலம் பதிலடிகொடுக்கும் வேலையை மங்களவும் ஆரம்பித்துவிட்டார் எனக் கூறப்படுகின்றது.

ஜனாதிபதியைச் சூழவிருக்கும் - அவருக்கு நெருக்கமான - அமைச்சர்கள் மற்றும் கட்சி முக்கியஸ்தர்களுக்கு இடையில் போட்டியும், பொறாமையும், ஒருவரின் காலை மற்றவர் வாரும் குழிபறிப்புக்களும் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்றன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சி அதிகாரம் தொடருமா அல்லது அது அந்தத்தை எட்டுகின்றதா என்ற சந்தேகநிலை உருவாகத் தொடங்கியதும் அவருக்கு அடுத்தமட்டத்தில் ஆட்சியில் அதிகாரம் செலுத்தும் சக்திகள் இடையே குத்து வெட்டு, குழப்பம், போட்டி எல்லாம் உச்சக்கட்டத்தை எட்டத்தொடங்கிவிட்டன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு மிக நெருக்கமானவர்களாகவும், ஆட்சி அதிகாரத்தில் அவரைத் தூக்கிவைப்பதற்குக் காரண கர்த்தாக்களாக விளங்கியவர்களுமான எஸ்.பி.திஸநாயக்கா, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ். பந்துல குணவர்தன, மஹிந்த விஜயசேகர போன்றோரை அவர் இழந்த போது - 2001 இல் - தமது அரசையும் இழந்து, ஆட்சியையும் ஐ.தே.கவிடம் பறிகொடுக்க வேண்டியவரானார் அவர்.

அதேபோன்று, தமக்கு அடுத்தகட்டத்தில் தமக்கு அரணாகவும், பலமாகவும் விளங்கும் இரண்டாம் மட்டத் தலைவர்களுடன் மீண்டும் இப்போது முரண்படுகின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

ஒருபுறம் ஜனாதிபதி குமாரதுங்கவுக்கும் அவரது அடுத்தகட்டத் தலைவர்களுக்கும் இடையில் முரண்பாடு என்று பார்த்தால் மறுபுறம் அந்த அடுத்த கட்டத் தலைவர்களுக்கு இடையிலும் இழுபறி உச்சம்.

ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சி அதிகாரத்தின் அஸ்தமனத்திற்கான அறிகுறியா இவை? காலம் விரைவில் பதில் தரும்.

# கரவெட்டிப் பிரதேச மீனவர்கள் தொழிலை ஆரம்பிக்க முடியாத நிலை

வடமராட்சி,ஏப்.11

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் தொழில் வாய்ப்புகளை இழந்த கரவெட்டிப் பிரதேச மீனவர்களுக்குப் போதிய நிவாரண உதவிகளை வழங்க அரச சார்பற்ற நிறுவனங்கள் எதுவும் முன்வராமையால் அப்பிரதேச மீனவர்கள் தமது வாழ்வை முன்னெடுத்துச் செல்வதில் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

வடமராட்சி வடக்குக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் அங்கத்துவ சங்கங்களில் ஒன்றான கரவெட்டிப் பிரதேச மீனவச் சங்கத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மீனவர்கள் பாக்கு நீரிணையுடன் இணைந்த தொண்டைமானாறு கடல் நீரேரியிலும், வங்காள விரிகுடாவுடன் இணைந்த வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் கடல் நீரேரியிலும் சிறு தூண்டில்களையும், வீச்சுவலைகளையும் வீசி சிறு தொழில்களை மேற்கொண்டுவந்தனர்.

பேரலையைத் தொடர்ந்து நீரேரியில் விடப்பட்ட தூண்டில்கள், வீச்சுவலைகள் யாவும் பேரலையுடன் அள்ளுண்டு சென்றுவிட்டன. அத்துடன், நீரேரிக்குள் படையினரின் காவலரண்களுக்குப் பயன்படுத்தப்பட்ட முட்கம்பிகள், முருகைக் கற்கள் என்பனவும் சிதறுண்டுள்ளன. இவற்றினால் நீரேரிக்குள் இறங்கமுடியாதிருப்பதுடன், சிறு தொழில்களை மீள ஆரம்பிக்கப் போதிய வீச்சுவலைகள், சிறுதூண்டில்கள் இன்மையால் சுமார் மூன்றரை மாதங்களுக்கு மேலாகியும் சிறு தொழில்களை ஆரம்பிக்க முடியவில்லை.

சுனாமி முத்திரையை மட்டும் நிவாரணமாகப் பெறும் இப்பிரதேச மீனவக் குடும்பங்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் நிவாரணங்கள் எதுவும் கிட்டாமையினால் இக்குடும்பங்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ஜ-173)

# தில்லைக் கூத்தன் காலமானார்

கொழும்பு,ஏப்.11

மேல்மாகாண மக்கள் முன்னணியின் அரசியல் ஆலோசகரும் தமிழ்த்தேசிய பணிக்குழுவின் தலைவரும் பிரபல அரசியல் விமர்சகரும், ஐக்கிய நாடுகள் சபையின் சவூதி அரேபியா, சிங்கப்பூர், தெற்காசிய ஆகியவற்றிற்கான துறைமுக தரவியல் விஞ்ஞானத்துறையியல் முன்னாள் ஆலோசகருமான தில்லைக்கூத்தன் நடராஜா கடந்த 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலமானார்.

இவரது மறைவு தொடர்பாக மேல்மாகாண மக்கள் முன்னணி அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அந்த அறிக்கையில், மறைந்த மாமனிதர் குமார் பொன்னம்பலத்துடன், இணைந்து தலைநகரில் தமிழ்த் தேசிய வாதத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாட்டையும் இறுதி மூச்சுவரை தனது அரசியல் விமர்சனங்களால் நியாயப் படுத்தியுள்ளார்.

அது மட்டுமன்றி மேல்மாகாணத்தில தமிழ் மக்களின் தளத்தைத் தனித்துவமாகப் பேரினவாதப்பிடியில் இருந்து விடுவித்துத் தனித் தமிழ ஒருமைப்பாட்டை மேல்மாகாண மக்கள் முன்னணியின் ஊடாக வெளிக்கொண்டுவர உறுதுணையாக இருந்தவர் தில்லைக்கூத்தன் நடராஜா - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் "இலங்கைத் தமிழர் கண்ணீர்", "யாமார்க்கும் குடியல்லோம்" எனும் இரண்டு நூல்களையும், "தமிழரின் விடிவு" என்னும் கட்டுரைத் தொகுப்பையும் வெளியிட்டுள்ளார்.

(ஜ-203)

# பார்த்திப வருடம் புதனன்று பிறக்கிறது

சித்திரைப் புதுவருடம் பார்த்திப வருடம் என்ற பெயருடன் நாளை மறுதினம் புதன்கிழமை பிறக்கிறது. பார்த்திப வருடப் பிறப்பின் கருமங்கள் தொடர்பாக குடாநாட்டிலிருந்து வெளிவரும் இரண்டு பஞ்சாங்கங்களிலும் தெரிவிக்கப்பட்டிருக்கின்ற விவரங்கள் வருமாறு:-

### திருக்கணித பஞ்சாங்கத்தில் இடம்பெற்றுள்ளதாவது:-

தாரண வருஷம் பங்குனி மாதம் 31ஆம் திகதி புதன்கிழமை இரவு (13.04.2005) உதயாதி நாழிகை 45 - 13 மணி இரவு 12 - 39 இல் பார்த்தீப என்னும் பெயருடைய புதுவருஷம் பிறக்கின்றது. அன்று நட்சத்திரம் மிருகசீரிடம் 2ஆம் பாதம்; வளர் பஞ்சமி திதி. இது 60 வருட சுற்று வட்டத்தில் 19 ஆவது வருஷமாகும். அன்று இரவு (நாழிகை 35 - 13) மணி 8.39 தொடக்கம் (பின்னிரவு நாழிகை 55 - 13) மணி 4.39 வரையும் மேட சங்கிரமண புண்ணியகாலம் எனப்படும். வருஷம் பிறக்கும் போது உதயலக்கினம் 'தனுசு' ஆகும்.

இப் புண்ணிய காலத்தில் சகலரும் சங்கற்ப பூர்வமாக மருத்துநீர் தேய்த்து தலையில் வேப்பமிலையும், காலில் கொன்றலிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து வெண்பச்சை நிறப்பட்டாயினும், அல்லது பச்சைக்கரை வைத்த வெள்ளைப் புது வஸ்திரமாயினும் தரித்து மரகதம் பதிக்கப்பெற்ற ஆபரணங்களையணிந்து நித்திய கர்மானுஷ்டானம் முடித்து கண்ணாடி, தீபம், பூரண கும்பம் முதலிய மங்கலப் பொருள்களைத் தரிசித்து விநாயகர் முதலிய இஷ்டகுல தேவாராதன தரிசனங்கள் செய்து, பெரியோர், குரு, பெற்றோர் முதலியோரை வணங்கி அவர்கள் ஆசிபெற்று மோதகம், வடை, வேம்பம்பூ முதலியவற்றுடன் அறுசுவைப் பதார்த்தங்களையும் போஜனஞ் செய்து, புதுப் பஞ்சாங்க பலன்களைக் கேட்டுச் சயனிப்பார்களாக.

மறுநாள் வியாழக்கிழமை அதிகாலை எழுந்து முன்போல் ஸ்நானஞ் செய்து, நித்திய கருமங்களை முடித்து கண்ணாடித் தீபம், பூரண கும்பம் முதலிய மங்கலப் பொருள்களைத் தரிசித்து, சூரியனுக்குப் பொங்கல் பூஜை வழிபாடுகள் செய்து, விருந்தினரை உபசரித்து, பிதிர் விரதானுசாரிகள் சிராத்தம் தர்ப்பணம் என்பன செய்து நண்பர்கள் விருந்தினர்களுடன் முன்போல் போஜனஞ் செய்து தாம்பூலமருந்தி, சுகந்த சந்தன புஷ்பாதிகளையணிந்து புதுவருடத்தில் ஆற்றக் கூடிய நற்கருமங்களைச் சிந்தித்து மங்களகரமாக வாழ்வார்களாக.

சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்: கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம், சித்திரை, சுவாதி, விசாகம், அவிட்டம்.

### வாக்கிய பஞ்சாங்கத்தில் இடம்பெற்றுள்ளதாவது:-

கலியுகாதி சுத்ததினம் 1865008, நாடி 40 விநாடி 31, தற்பரை 15 இற்குச் சிரியான தாரண பங்குனி மீ 31 உ (13.04.2005) புதன்கிழமை முன்னிரவு நாடி 40 விநாடி 31 (மணி 10 - 17)இல் பூருவபக்ஷ பஞ்சமித் திதியில், மிருக சீரிட நக்ஷத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் சோபன நாமயோகத்தில், பாலவக்கரணத்தில் விருச்சிக லக்கினத்தில், மீன நவாம்சத்தில், சனி காலவோரையில், சூரிய சூக்குமவோரையில், சாத்வீக குண வேளையில் நக்ஷத்திர பக்ஷியாகிய வல்லூறு துயிற்றொழிலும் சூக்கும பக்ஷி துயிற் தொழிலும் செய்யுங்காலத்தில் இப் புதிய பார்திப வருஷம் பிறக்கிறது. முன்னிரவு நாடி 30 விநாடி 31 (மணி 6-17) முதல் பின்னிரவு நாடி 50 விநாடி 31 (மணி 2-17) வரை விஷு புண்ணிய காலமாகும்.

இப்புண்ணிய காலத்தில் யாவரும் சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் கடப்பமிலையும், காலில் வேப்பிலையும் வைத்து ஸ்நானஞ்செய்து வெண்மை சிவப்பு நிறமுள்ள பட்டாடையாயினும் அல்லது வெண்மை சிவப்புக்கரையுடைய புதிய ஆடையாயினும் உடுத்து முத்துமாணிக்கம் இழைத்த ஆபரணம் பூண்டு, சுகந்த சந்தணம் பூசி, நறுமலர் சூடி, விநாயகர் முதலிய குலதெய்வ வழிபாடுசெய்து, இயன்ற தானதருமங்களியற்றி, குரு, பெற்றார் முதலிய பெரியாரை வணங்கி அவர்களின் ஆசி பெற்று, பந்து மித்திரர்களுடன் அளவளாவி, ஆறுசுவை அமைந்த உண்டிகளுடன் மோதகம், அப்பவர்க்கம், மாதுளம் பழம் என்பவை சேர்த்தருந்தி தாம்பூலம் தரித்து, கண்ணாடியில் முகதரிசனம் செய்து, புதிய வருஷ பலாபலன்களை வாசித்தும் கேட்டும் நன்குணர்ந்து தத்தம் சமய நூல்களைப் பாராயணஞ் செய்து, மங்களகரமாகச் சயனஞ்செய்க.

மறுநாளாகிய பார்த்தீப வருஷம் சித்திரை மீ 1 உ வியாழக்கிழமை வைகறையில் துயிலெழுந்து மனத்தூய்மையுடன் வழிபடும் கடவுளைத் தியானித்து தாம் செய்தவைகளையும் மேல் செயற்பாலனவாகிய அறம், பொருள், இன்பங்களையும் சிந்தித்து கண்ணாடி, தீபம், நிறைகுடம், தனது வலக்கை, ஆசிரியரின் பாதம், வழிபடும் தேவதையின் திருவுருவம், திருமுறைப்புத்தகம், தாமரை முதலிய பூக்கள், பழவகை, குங்குமம், மஞ்சள், சந்தனம், வெற்றிலை, பாக்கு, முதலிய மங்களப் பொருள்களைத் தரிசித்து நித்திய நைமித்திய தன்மானுட்டானங்களை முடித்து, தத்தம் வீடுகளில் சூரியனுக்கு பொங்கல் பூசை விழிபாடு செய்து முன்போல போசன பூஷண தானதருமங்களியற்றி மங்களகரமாக வாழக்கடவர்.

★ மருத்து நீர்:- தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பலி, சுக்கு, இவைகளை, சுத்த ஜலத்திலிட்டு காய்ச்சிக்கொள்க.

சங்கிரம தோஷ நக்ஷத்திரங்கள்:- கார்த்திகை 2,3,4ஆம் கால்கள், ரோகினி, மிருகசீரிடம், சித்திரை, சுவாதி, விசாகம் 1,2,3ஆம் கால்கள், அவிட்டம் இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்ந்து ஸ்நானம் செய்து தானதரும வழிபாடுகளை விஷேடமாகச் செய்க.

### நாளை

பங்குனி 30
செவ்வாய்க்கிழமை
12.04.2005
திதி : சதுர்த்தி
பின்னிரவு: 02.47 வரை
நட்சத்திரம் : கார்த்திகை
பிற்பகல் 01.08 வரை
சக்தி கணபதி சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 10.36 - 12.06
ராகுகாலம் : 03.06 - 04.36
(யாவும் பழைய நேரப்படி)

# யாழ். ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தில் உள்ளூர் பொருள் விற்பனைப் பிரிவு

அரியாலை,ஏப்.11

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையம் ஒன்றை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திறந்து வைத்துள்ளது. சங்கத் தலைவர் சூ.சிறில் தலைமையில் நடைபெற்ற இந்தத் திறப்பு விழா நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களான எஸ்.கனகசபாபதி, கூட்டுறவுத்துறைப் பொறுப்பாளர் பொ.புஸ்பகுமார், பொ.சிவலிங்கம், சி.கந்தசாமி, எஸ். கே.சண்முகநாதன், எஸ்.ஐயாத்துரை, சங்கப் பணிப்பாளர் பொ.தியாகராஜா, நிறைவேற்று உத்தியோகத்தர் நல்லையா, பொதுமுகாமையாளர் எம்.தெய்வேந்திரன் ஆகியோர் கூட்டாக மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். தொடர்ந்து உள்ளூர் உற்பத்தி நிலையத்தை வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் இ.இளங்கோவன் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் சங்கத்தின் இயக்குநர்கள், சங்கப் பணிப்பாளர்கள் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்த விற்பனை நிலையம் சங்கத்தின் தலைமைக்காரியாலய கீழ்மாடி வர்த்தக நிலையக் கட்டடப் பகுதியில் திறக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பொள்கள் மற்றும் மரக்கறி விதைகள் என்பன விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. (ஜ-17)

### உதவாக்கு

பேரசையும், சொகுசும் பெருமை மிக்க அரசாங்கம் ஒவ்வொன்றையும் அழிக்கும் தொற்றுநோய்கள்.

— வி.வி.

# மாபெரும் மலிவு விற்பனை

**சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு யாழ்.மக்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு இதோ உங்களுக்கான அதிரடி விலைகுறைப்பு**



| | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| சாறி | ~~1350~~ | 750 |
| சாறி | ~~1050~~ | 600 |
| சாறி | ~~750~~ | 475 |
| சல்வார் (L) | ~~950~~ | 400 |
| சல்வார் (m) | ~~1050~~ | 550 |
| சல்வார் (m) | ~~700~~ | 300 |
| சல்வார் (S) | ~~500~~ | 200 |
| எலிபன் கிற் (S) | ~~950~~ | 500 |
| சோலிக் கிற் (L) | ~~1300~~ | 700 |
| சோலிக் கிற் (m) | ~~1050~~ | 550 |
| கவுண் (m) | ~~950~~ | 450 |
| கவுண் (S) | ~~600~~ | 300 |
| ஸ்கேட் | ~~600~~ | 300 |
| ஸ்கேட் | ~~500~~ | 200 |
| ஸ்கேட் அன் பிளவுஸ் | ~~800~~ | 400 |

(சி-42230(26-14-45)

உடனே விரையுங்கள்! கையிருப்பு இருக்கும் வரை மட்டுமே இந்தச் சலுகை வாய்ப்பு
முகூர்த்தப் பட்டுப்புடைவைகளின் மகத்தான ஸ்தாபனம்

**MAHA SILKS**
**மகா சில்க்ஸ்**
32, 40A, நவீனசந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.

கண் கவரும் கன்னியருக்கும் கட்டழகு ஆண்களுக்கும் அழகு சேர்க்கும் சிறந்த ஸ்தாபனம்

**BEAUTY SILKS**
**பியூட்டி சில்க்ஸ்**
69, நவீனசந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.



**Dialog** டயலொக்

100/-, 400/-, 1,000/- விலைகளில்
கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும்
Sim இணைப்புகளையும் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**Sri Murugan**

Tele Communication
&Agency Post Office,
**303, K.K.S. Road, Jaffna.**
T.P.: 021 222 5392
Fax: 222 3435.

எந்நேரமும் உன்னுடன்....!

(சி-42233)



**அபிவிருத்தி அதிர்ஷ்டம்**

| | |
|---|---|
| [illegible] | 669 |
| [illegible] | 08-4-2005 |

5358414 - 5374301

வெற்றி இலக்கங்கள்

**13 22 26 50**

ரூ.33,00,800/-

ரூ. 40,90,250/-

| | | | |
|---|---|---|---|
| [illegible] | 3,53,382 | 10/- | 35,33,920/- |
| [illegible] | 32,491 | 20/- | 6,49,820/- |
| [illegible] | 32,234 | 30/- | 9,67,020/- |
| [illegible] | 2,915 | 100/- | 2,91,500/- |
| [illegible] | 867 | 500/- | 4,33,500/- |
| [illegible] | 77 | 5,000/- | 3,85,000/- |
| [illegible] | 05 | 1,00,000/- | 5,00,000/- |
| [illegible] | - | 33,00,800/- | - |
| [illegible] | 4,21,989 | - | 78,13,318/- |

5365578-5-01
5366519-8-61
5368034-4-69
5360701-6-35
5364956-8-89


# கண்ணீர் அஞ்சலி



ஆறுகால்மடம் ஞானவைரவர் ஆலய ஆரம்பகால ஸ்தாபகரும் எமது ஆருயிர் நண்பனுமாகிய

## கதிரவேலு ஏலாளசிங்கம்

அவர்கள் 08-04-2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய பரந்தாமனிடம் மன்றாடுகிறோம்.

*புது றோட்,*
*ஆறுகால்மடம்.* (44081) (24-14-45-26) **த.சிவம் குடும்பம்.**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மலக்கியாஸ் மரியமலர்



நாவாந்துறை, புனித நீக்கிலஸ் ஆலயத்தைச் சேர்ந்த திருமதி மலக்கியாஸ் மரியமலர் 09-04-2005 சனிக்கிழமை இறையடி சேர்ந்து விட்டார்.

அன்னார் சு.மலக்கியாஸ் (அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் டக்ளஸ் நியூட்டன் (பிரான்ஸ்), டெனிஸ் கனீசியஸ் (பண்டாரவளை), டொறிஸ் மரியதாஸ் (அமெரிக்கா), அஞ்சலா, ஸ்ரிபன் (சுவிஸ்), காந்தன் (பிரான்ஸ்), யூட் (பிரான்ஸ்), அருட்சகோதரி விக்ரறின் செல்வதி (தி.கு.க.), றெஜி (இந்தியா), றஜனி, செல்வநாயகி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுமதி, சாந்தி, மரியதாஸ், யூஜின், ஜெயா, பிறேமினி, வதனா, வெலோனியஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற அல்பிறட், அருட்சகோதரி மேசி (தி.கு.க. - ஊர்காவற்றுறை) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11-04-2005) திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**13, கோயில் வீதி,** சு.மலக்கியாஸ் (அதிபர் - கணவர்),
**நாவாந்துறை.** அருட்சகோதரி மேர்சி (தி.கு.க. - சகோதரி),
(44084)(26-14-45) அருட்சகோதரி செல்வதி (தி.கு.க. - மகள்),
பிள்ளைகள், மருமக்கள்.

## செல்லையா திருநாவுக்கரசு

(ஓய்வுபெற்ற சார்ஜன்ட், கலால் பகுதி)



யாழ்ப்பாணம், நல்லூர் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லையா திருநாவுக்கரசு அவர்கள் சனிக்கிழமை (09-04-2005) சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா மற்றும தங்கம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற திருமதி நாகரெத்தினத்தின் அன்பு மருமகனும் மங்களாதேவியின் அன்புக் கணவரும் றமேஸ்கரன் (கணக்காளர் - கொழும்பு), சுபாஸ்கரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேந்திரன் (ஓய்வுபெற்ற லிகிதர், ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனம்), குலேந்திரன் (குலம்), விக்கினேஸ்வரன் (பிரதிப் பிரதான அலுவலர், இலங்கை நாடாளுமன்றம்), தர்மாம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரரும் லோகேஸவரி, வரதலட்சுமி, காந்தினி, நவரட்ணராஜா (ஊழியர், யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் அருங்கரன் (யாழ்மருத்துவபீடம்), மீரா (மக்கள் வங்கி, யாழ்ஸ்ரான்லி வீதி), அபிராமி (முகாமைத்துவபீடம், யாழ்.) பிரியங்கா, ஆரூரன் (யாழ்.இந்துக் கல்லூரி), கிருத்திகா (கொழும்பு மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் தர்ஷினி (தணிகா - ஸ்ரான்லிக் கல்லூரி)யின் பாசமிகு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-04-2005) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மாலை 4.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**இல.5, முதலியார் ஒழுங்கை,**
**நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.** T.P.: 222 2467 **குடும்பத்தினர்.** (44085)(26-14-45)

## அரச திணைக்கள மேற்பார்வையாளர்கள் சங்கம் அமைப்பு

நல்லூர்,ஏப்.11

வடமாகாணத்தைச் சேர்ந்த திணைக்களங்களில் பணியாற்றும் மேற்பார்வையாளர்கள் ஒருங்கிணைந்து புதிய தொழிற்சங்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

நா.மோகனசுந்தரம் தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவராக இ.அசோகனும் உப தலைவராக க.நடராசாவும் செயலாளராக எஸ்.சேவியரும் உபசெயலாளராக கு.கதிர்காமநாதனும் பொருளாளராக சி.இளங்கீரனும் தெரிவாகினர்.

பத்து உறுப்பினர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

வடமாகாண மேற்பார்வையாளர் சங்கம் என்ற பெயரில் இது இயங்கவுள்ளது. (த-111)

## விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன

வடமராட்சி கிழக்கிலுள்ள குடத்தனை கமக்காரர் சம்மேளனத்துக்கும் அம்பன் கமககாரர் சம்மேளனத்துக்கும் தலா இரண்டு நீரிறைக்கும் இயந்திரங்களும் இரண்டு தெளிகருவிகளும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் அண்மையில் வழங்கப்பட்டன.

குடத்தனை கலாசார மண்டபத்தில் வைத்துக் கமக்காரர் சம்மேளனத் தலைவர் வி.இராசதுரை, அம்பன் கமக்காரர் சம்மேளனச் செயலாளர் என். பத்மநாதன் ஆகியோரிடம் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் இந்த உபகரணங்களை வைபவரீதியாகக் கையளித்தார்.

இவற்றினால் குடத்தனையில் 150 விவசாயக் குடும்பங்களும் அம்பனில் 75 விவசாயக் குடும்பங்களும் பயனடையவுள்ளன.(8-173)

## செயலாளர் நியமனம்

வேலணைப் பிரதேச சபையின் செயலாளராகக் கைலைநாதன் மகேந்திரலிங்கம் இம்மாதம் 8ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் கடந்த 12 வருடங்களாக நிதி உதவியாளராகவும் நிர்வாக உத்தியோகத்தராகவும் கடமையாற்றிய இவர் இன்று திங்கட்கிழமை தனது புதிய கடமையினைப் பொறுப்பேற்கவுள்ளார்.(த-73)


# இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு

## Muthayamal Educational Institutions

RASIPURAM - 637 408. NAMAKKAL - (DT) TAMILNADU. www.muthayammal.com



இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது **ANNA (Engineering) UNIVERSITY - PERIYA UNIVERSITY** ஆகியவற்றின் பட்டதாரி **(Degree Courses)** நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் **A/L** சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவியரீதியில் அங்கிகரிக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலாண்டுகள் | உட்பிரவேச தகமைகள் |
|---|---|---|
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Infornation Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc.Biochemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc.Microbiology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths,Chemistry,Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S. | 3 Years | Pass in All Subjects in any Discipline |

**O/L** மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் **Kaveri Polytechnical College**ல் சேர்ந்து 3 வருட **Diploma**வை பூர்த்தி செய்து, மேலும் 3 ஆண்டுகளில் **Engineer** ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் pending results முறையில் யூலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியை தொடங்க வாய்ப்பு

**Call: 011-4512591** for prospectus and application forms
**SCHOLARS INFORMATION CENTER**
2nd Floor, Colombo Plaza, 50, Galle Road, Colombo-06.
email : peter@scholars-info.com





நாவாந்துறை புனித மரியாள் ஆலயத்தில் இருந்து யாழ்நகரூடாக யாழ். அடைக்கல அன்னை ஆலயத்திற்கு நற்கருணைப் பவனி அண்மையில் இடம்பெற்றது.

நற்கருணை ரதப் பவனி வருவதை முதலாவது படத்திலும் நற்கருணையை ஆலயத்திற்கு ஆசீர் வழங்க அருட்தந்தை எடுத்துச்செல்லவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: கொழும்புத்துறைச் செய்தியாள...)

# மாமுனை, கட்டைக்காடு பகுதிகளில் தற்காலிக குடியிருப்புகள் கையளிப்பு

செம்பியன்பற்று,ஏப்.11

சுனாமி கடற்கொந்தளிப்பால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தற்காலிக வீட்டுத் தொகுதிகள் கொண்ட குடியிருப்புகள் மக்களிடம் கையளிக்கப்பட்டன.

நலன்புரி நிலையங்களில் மிக மோசமான சுகாதார வசதிகளுடன் இருந்த இம்மக்களுக்கு இவ்வீட்டுத் திட்டம் மிகப் பயனுள்ளதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி கிழக்கு மாமுனைப் பகுதியில் அமைக்கப்பட்ட 30 தற்காலிக வீடுகள் கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் மங்கள விளக்கை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கு சுனாமி அனர்த்த செயலணிக் குழுப் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

கட்டைக்காடுப் பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் அமைக்கப்பட்ட 70 வீடுகளைத் தமிழர் புனர்வாழ்வுக்கழக வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர் யூட் அண்மையில் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (த-36)

# தென்னிந்தியத் திருச்சபையின் தலைமைப் பேராயரின் ஆணையாளர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஏப்.11



தென்னிந்தியத் திருச்சபையின் தலைமைப் பேராயரின் ஆணையாளராகக் கிளிநொச்சி வட்டார குருமுதல்வர் வண.பி.நவேந்திர அனுகூலன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தென்னிந்தியத் திருச்சபைப் பேராயராகக் கடமையாற்றிய கலாநிதி எஸ்.ஜெபநேசன் கடந்த மாதம் 28ஆம் திகதி ஓய்வுபெற்றதை அடுத்து, புதிய பேராயர் தெரிவுசெய்யப்படும் வரை தென்னிந்தியத் திருச்சபையின் தலைமைப் பேராயர் மகாகனம் B.P.சுகந்தர், தமது ஆணையாளராக வண.பி.நவேந்திர அனுகூலனை நியமித்துள்ளார்.

வரணியைச் சேர்ந்த வண.பி.நவேந்திர அனுகூலன், யாழ்ப்பாணக் கல்லூரியிலும் தமிழ் நாடு இறையியற் கல்லூரியிலும் கற்றவர். செரம்பூர் பல்கலைக்கழகத்தில் B.D. பட்டம் பெற்ற இவர், முன்னாள் பேராயர் டி.ஜே. அம்பலவாணரிடம் குருத்துவ அருட்பொழிவைப் பெற்றிருந்தார். (எ)

# இடிந்து விழும் நிலையில் பழைமைவாய்ந்த மதிற்சுவர்

யாழ்ப்பாணம்,ஏப்.11

மருதனார்மடத்திலுள்ள 'அருளகம்' பெண்கள் பராமரிப்பு இல்ல வளாகத்தின் மேற்குப்புற மதிற்சுவர் இடிந்துவிழும் நிலையில் சரிந்துள்ளது.

சுமார் 150 மீற்றர் நீளமான - மிகவும் உயரமான இந்த மதிற்சுவர் பல வருடங்கள் பழைமையானது. இந்த மதிலுக்கு அருகாகச் செல்லும் சிறிய வீதியூடாகப் பெருமளவு விவசாயிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் நாளாந்தம் போக்குவரத்துச் செய்கின்றனர்.

இந்த நிலையில் மேற்படி மதில் சரிந்து வீதியில் விழும் நிலையில் இருப்பதால் மேற்படி வீதியால் செல்வோர் பெரும் ஆபத்தை எதிர்நோக்கியிருக்கின்றனர்.

தற்போது மழை பெய்யத்தொடங்கியிருப்பதால் இந்த மதிற்சுவர் படிப்படியாக மேலும் சரிந்து கொண்டிருக்கிறது.

இந்த மதிற்சுவரை இடித்து அகற்றிவிட்டு புதிதாக மதிலை அமைக்குமாறு அப்பகுதி விவசாயிகளும் பொதுமக்களும் 'அருளக' நிர்வாகத்தினரிடம் ஏற்கனவே கேட்டிருந்தனர். (த)




# ஆசிரியர் பற்றாக்குறை இருப்பினும் கற்றல் செயற்பாடுகளில் பாதிப்பில்லை

## தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஏப்.11

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் பெரும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றபோதும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்படாத வகையில் அவர்களுக்கான விரிவுரைகள் ஒழுங்காகவே நடைபெறுகின்றன.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் என்.யோகராஜன்.

'தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரைகள் ஒழுங்கின்றி நடப்பதாக முறைப்பாடு' என்ற தலைப்பில் கடந்த 7ஆம் திகதி உதயனில் வெளியான செய்தி தொடர்பாகத் தமது கருத்தை கடந்த சனிக்கிழமை வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஆரம்பகாலத்தில் 48 நிரந்தர விரிவுரையாளர்கள் தொழில்நுட்பக் கல்லூரியில் கடமையாற்றி வந்தனர். அவர்களின் பலர் ஓய்வுபெற்றுவிட்டனர். மேலும் சிலர் மாற்றம் பெற்று வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டனர். தற்போது 10 ஆசிரியர்களே உள்ளனர். ஆயினும், இவர்களையும் வருகை விரிவுரையாளர்களையும் கொண்டு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படாத வகையில் விரிவுரைகள் நடைபெறுகின்றன.

பொறியியல்துறையில் 5 வருகை விரிவுரையாளர்கள் கற்பிக்கின்றனர். இவர்கள் கடந்த ஒரு மாத காலமாக சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வேலைத்திட்டங்களில் ஈடுபட்டிருந்தமையால் தொழில்நுட்பக் கல்லூரிக்கு வரமுடியவில்லையென அறிவித்திருந்தனர். அத்துடன், சுனாமி அனர்த்தம் காரணமாக நாட்டில் உள்ள ஏனைய தொழில்நுட்பக் கல்லூரிகள் அனைத்தும் பெப்ரவரி மாத இறுதிப் பகுதியிலேயே ஆரம்பமாகின. ஆனால், யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மட்டும் சுனாமியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக ஜனவரி மாதம் 3 ஆம் திகதியே ஆரம்பமானது. மாணவர்கள் ஒரு மாத காலமாக மிகுந்த அர்ப்பணிப்புடன் சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார்கள். இந்தக் காலப்பகுதியில் அவர்களுக்கான விரிவுரைகள் நடைபெறவில்லை. இதனைத் தவறாகப் புரிந்துகொண்ட சிலர் இவ்வாறு முறைப்பாடு செய்திருக்கலாம்.

இப்போது பொறியியல்துறைக்கான வருகை விரிவுரையாளர்கள் மூவர் பணிக்கு வரத் தொடங்கியுள்ளனர். அனைத்து மாணவர்களுக்கான விரிவுரைகளும் ஒழுங்காக நடைபெறுகின்றன.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கென 5 விசேட கற்கை நெறிகளும் தொழில்நுட்பக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேசன் வேலை, தச்சுவேலை, நீர்க்குழாய் பொருத்துதல், மின் ஒட்டு வேலை, வீட்டு மின் இணைப்பு ஆகிய பயிற்சிநெறிகளுக்கு அடிப்படைத் தகைமைகளுடன் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொழில்நுட்பக் கல்லூரிச் சமூகத்துக்கும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைக்கும் இடையிலான கலந்துரையாடல் கடந்த மாதம் நடைபெற்றது. இதன்போது ஆசிரியர், மாணவர் கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழுவினர் ஆசிரியர்கள், மாணவர்களின் வரவு மற்றும் விரிவுரைகள் நடைபெறுகின்றனவா என்பதைக் கண்காணித்து வருகின்றனர்.

நிலைமை இப்படி இருக்க, இந்த முறைப்பாடு ஒருசிலரின் விசமத்தனமான, வேண்டத்தகாத பிரசாரம் என்றே நான் கருதுகிறேன் - என்றார் யோகராஜன். (ஐ-8)

# நவீன வசதிகளைக் கொண்டதாக முற்றவெளி எரிபொருள் நிலையம்

## புதிய எண்ணெய்த் தாங்கிகள் புதைப்பு

அரியாலை,ஏப்.11

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முற்றவெளிப் பிரதேசத்தில் அமைந்திருக்கும் எரிபொருள் விற்பனை நிலையம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இராணுவ நடவடிக்கையால் தரைமட்டமாக்கப்பட்ட இக்கட்டடத்தைத் தற்போது நவீன வசதிகளைக்கொண்ட கட்டடமாக நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


பெற்றோல் விநியோகத்திற்கென தற்போது புதிய தாங்கி ஒன்று புதைக்கப்பட்டுள்ளது.

மண்எண்ணெய்க்கும் புதிய தாங்கி ஒன்று விரைவில் கொழும்பில் இருந்து எடுத்துவரப்படவுள்ளது என்றும் - கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன், நவீன வசதிகள் கொண்ட மின்சார கம்பியூட்டர் மீற்றர் பம்பிகளும் பொருத்தப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

கடந்த 1997 ஆம் ஆண்டு முதல் இதவரை இந்த எரிபொருள் விற்பனவு நிலையம் எதுவித வசதிகளும் இன்றி சிறிய கொட்டகையில் இயங்கிவந்தது. (ஐ-17)





முற்றவெளியில் யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிலையம் தற்போது இயங்கிவரும் கொட்டகையையும் அங்கு புதிய எரிபொருள் தாங்கிகள் புதைக்கப்பட்ட இடத்தையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: பா.நந்தகுமார்)

## 3 ஆவது ஆண்டு பிறந்தநாள் வாழ்த்து

11.04.2005




லண்டனில் வசிக்கும்
அனரனி செல்வராஜினி தம்பதியினரின்
செல்வப் புதல்வி
செல்வி ஆன்சகிலா

தனது 3 ஆவது பிறந்தநாளை இன்று (11.04.2005) திங்கட்கிழமை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை ஜேர்மனியில் இருக்கும் மாமா எமியானுஸ், மாமி மேரிகல்பனா, மச்சான் எமில்ராஜ், லண்டனில் வசிக்கும் மாமா அலோசியஸ் யேகன், மாமி சோபிகா மற்றும் இலங்கையிலுள்ள அம்மப்பா, அம்மம்மா, சித்திமார், மாமாமார், அப்பம்மா, அப்பப்பா, மாமிமார், மாமாமார், மச்சான், மச்சாள்மார் ஆகியோர் குழந்தை யேசுவின் அருள்பெற்று பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

159, குருசோ வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(44012)(29-11-16)

கஸ்மீர் புஸ்பராசா அ[illegible]னியாப்பிள்ளை
குடும்பத்தினர் (அம்மப்பா, அம்மம்மா)

## ஊற்றல் மயானத்தில் சிரமதானம்

கைதடி,ஏப்.11

இதுவரை காலமும் திருத்தப்படாமல் இருந்த கைதடி ஊற்றல் மயானம் அண்மையில் கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தினரின் முயற்சியினால் புனரமைக்கப்பட்டுள்ளது.

பல வருடங்களாக வெட்டப்படாமல் மயானத்தைச் சுற்றி நிறைந்திருந்த பற்றைகள், முட்புதர்கள் என்பன முற்றாக வெட்டி அகற்றப்பட்டன. சடலங்களைச் சீராக வைத்து தகனம் செய்வதற்கு ஏற்றவாறு மயானம் துப்புரவு செய்யப்பட்டது.

(த-75)

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் சித்திரை 12 ஆம் திகதி (12.04.2005)
செவ்வாய்க்கிழமை காலை 10 மணி முதல் 11.30 மணிவரையுள்ள
சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**T.டார்வின்**
(ஆசிரியர்-உடுவில் மகளிர் கல்லூரி)
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**V.கொன்சலீனா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணையுடன் திருகோணமலை புனித மரியன்னை பேராலயத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து இல 29, கஸ்கிசன் வீதி, "சுபமங்களா திருமண மண்டபத்தில்" நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
20.04.2005 புதன்கிழமை உடுவில் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் வரவேற்புபசாரத்திலும் மதியபோசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

**திருமதி திருஞானம் குடும்பம்**
உடுவில் மகளிர் கல்லூரி,
ஆசிரியர் இல்லம், உடுவில்.

(44023)(29-11-16)

**திரு.திருமதி வி.அன்ரன் மத்தியூஸ்**
சகோதரர்கள்
47, யாட் அடைவீதி, திருகோணமலை.

# Manipal U

**available - accessible - affordable – personalized education**

The Sikkim Manipal University of Health, Medical and Technological Science was established by an Act of Sikkim State Legislature in 1995. Manipal is the nucleus of 53 educational institutions, which has an enrollment of 30,000 students. This includes 2 Universities and 27 professional colleges. The student body represents 32 countries and the degrees are recognized in over 40 countries.

The Manipal University has the approval of University Grants Commission and of Common Wealth.

## ADMISSION ANNOUNCEMENT FOR 2005/ 2006
## MBA / MBA IT

**Now for the first time** you have the opportunity of obtaining a prestigious **MBA** at the only "Authorized" International Study Centre of Sikkim Manipal University in ***North &East of Sri Lanka.***

### Master of Business Administration (MBA)

The course aims to train graduates in Infrastructure Management Skills required at the higher levels of management. Students will be exposed to the concept of management and the latest Technologies and Strategies required by the relevant industries.

**FIRST SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MB 01 | Management process and organization behavior | 4 |
| MB 02 | Internet Application | 2 |
| MB 03 | Marketing Management | 2 |
| MB 04 | Human Resource Management | 2 |
| MB 05 | Operation Management | 2 |
| MB 06 | Financial Management | 2 |
| MB 07 | Management Information System (MIS) | 2 |
| | Total Credits | 16 |

**SECOND SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MB 08 | Strategic Technology Management | 4 |
| MB 09 | Management of Technology transfer, absorption & IPR | 2 |
| MB 10 | Business Process, Re-Engineering | 2 |
| MB 11 | Enterprise Resource Planning | 2 |
| MB 12 | e-Customer Relationship Management & Supply Chain Management | 2 |
| MB 13 | Conflict Management & Negotiation Skill | 2 |
| MB 14 | History of Management, Case study | 2 |
| | Total Credits | 32 |

**THIRD SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MB 15 | Infrastructure Management | 2 |
| MB 16 | Fundamentals of Infrastructure Project Financing | 4 |
| MB 17 | Infrastructure Development & Policy Planning | 2 |
| MB 18 | Project Management | 4 |
| MB 19 | Decision Support Systems (DSS) | 4 |
| | Total Credits | 48 |

**FOURTH SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MB 20 | Elective | 8 |
| MB 21 | Project | 8 |
| | Total Credits | 64 |

**ELIGIBILITY**
Degree (any discipline) or equivalent professional qualification.
Work experience will be an added advantages.
Duration : 2 years
(Full time / Part time

### Master of Business Administration in Information Technology (MBA IT)

There is a dramatic and immediate need for executives and IT managers who not only understand the strategic use of IT, but also have a strong business orientation and well developed leadership, communications and management skills. That's where our MBA in IT Management can help.

**FIRST SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MI 0001 | Management Process & Organization Behavior | 4 |
| MI 0002 | Window based application | 2 |
| MI 0003 | Marketing Management | 2 |
| MI 0004 | Financial Accounting | 2 |
| MI 0005 | Business Applications of IT | 2 |
| MI 0006 | Internet (HTML) | 2 |
| | Total Credits | 16 |

**SECOND SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MI 0007 | Human Resource Management | 4 |
| MI 0008 | Visual Basic | 4 |
| MI 0009 | Operations Management | 2 |
| MI 0010 | Financial Management | 2 |
| MI 0011 | C++ | 2 |
| MI 0012 | Oracle | 2 |
| | Total Credits | 32 |

**THIRD SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MI 0013 | Management Information System (MIS) | 4 |
| MI 0014 | e-Business and IT law | 4 |
| MI 0015 | Conflict Management & Negotiation Skills | 2 |
| MI 0016 | Software Project Management | 2 |
| MI 0017 | Website Management & Design | 2 |
| MI 0018 | Data Warehousing, Data Mining | 2 |
| | Total Credits | 48 |

**FOURTH SEMESTER**

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MI 0019 | E-CRM & Supply Chain Management | 4 |
| MI 0020 | International Business | 4 |
| MI 0021 | Enterprise Resource Planning | 4 |
| MI 0022 | New Technologies | 2 |
| MI 0023 | Project | 2 |
| | Total Credits | 64 |

**ELIGIBILITY**
Degree or equivalent professional IT qualification.
Work experience will be an added advantages.
Duration : 2 years
(Full time / Part time

www.manipalu.com
**Manipal International Study Center @**
**IIS City Campus**
# 181, Navalar Road, Jaffna.
Tel:021 222 8060, 021 222 2201
Fax: 021 222 6933
E-mail: iis@sltnet.lk

Sikkim Manipal University India
Manipal INSPIRED BY LIFE

## சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
# பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்தால் கீழ்க் குறிப்பிடப்படும் பதவிக்கு 18-45 வயதுக்குட்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கிளை முகாமையாளர் :- 208/14
சம்பள அளவுத்திட்டம் :- 31/99 (அமைவாக) 5000 - 6450 / 70x10-75-10

கூ.வே. ஆணைக்குழு சுற்றுநிருபத்திற்கமைந்த ஏனைய படிகளும் வழங்கப்படும்.

### அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ. கூட்டுறவு பணிப்பாளரின் 15 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணிப்பாளர் 14 ஆவது சம்பளம் சம்பந்தப்பட்ட துறையிலான 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

ஆ. கூட்டுறவுப் பணிப்பாளர் (சாதாரண தரம்) க.பொ.த. இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக, தூய கணிதம்/ தமிழ் உள்ளடங்கியதாக 6 பாடங்களில் சித்தி.

குறிப்பு:- விண்ணப்பதாரர் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, கல்வித்தகைமைகள், தொழில் அனுபவச் சான்றிதழ், நற்சான்றிதழ் ஆகியவை அடங்கிய சுயவிவரங்களுடன் 25.04.2005 திகதிக்குள் கிடைக்கக் கூடியதாக மேற்படி சங்க முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பனை தென்னை வள**
**அபிவிருத்திக்,**
**கூட்டுறவுச்சங்கம், சங்கானை**

(44015)(29-11-16)

## கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை
# வெற்றிடங்கள்

1. பதவி: கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் a) ஆண்கள் b) பெண்கள்
2. தகைமைகள்: க.பொ.த. (சாதாரண தரம்) சித்தி
3. வயது: 20 தொடக்கம் 55 வயது வரை
4. உயரம்: 5 அடி 4 அங்குலம்

குறிப்பு: 1. இளைப்பாறிய பொலீஸ் /படை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை
அத்துடன்
சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை சாரணர்கள், விளையாட்டுத்துறை வீரர்கள்.
2. நல்ல கண்பார்வையும், தேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

5. சம்பளம்: ரூபா 6000/= (மாதமொன்றுக்கு)
ரூபா 500 (வருகை ஊக்குவிப்பு)
மற்றும் E.P.F, E.T.F உம் வழங்கப்படும்.

கிராம சேவை அலுவலரின் நற்சான்றுப்பத்திரம், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், தேசிய அடையள அட்டை, விசேட அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் 16.04.2005 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கீழ் உள்ள முகவரிக்கு சமுகமளிக்கவும்.

**பணிப்பாளர்.**

**கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை,**
**இல.807, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-42179)(42-29-11-16)

# கிளிநொச்சிக் குளங்களிலிருந்து வெளியேறும் நீர் கடலில் கலக்கிறது

## வீண் விரயத்தைத் தடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை

பரந்தன்,ஏப்.11

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெரும் மழை பெய்துவருவதால் அங்குள்ள குளங்கள் நிரம்பி வழிகின்றன.

வயல்களிலும் அளவுக்கதிகமாக நீர் நிரம்பியுள்ளதால் விவசாயிகள் அந்த நீரை ஆறுகளுடன் கலக்கவிடுகின்றனர். குளங்களின் நீரும் வழிந்து ஆற்று வாய்க்கால் வழியே ஓடி ஆனையிறவுக் கடலுக்குள் பாய்கிறது. இதனால், நாளாந்தம் பெருமளவு நீர் வீண் விரயமாகின்றது. வட்டக்கச்சிப் பகுதியிலிருந்து பெருமளவு நீர் கனகராயன் ஆறு வழியாகக் கடலுக்குச் செல்கிறது.

இம்முறை சிறுபோகச் செய்கைக்கென இரணைமடுக்குளத்திலிருந்து வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளுக்கே அதிகளவில் நீர் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்போது குளத்தின் நீர்மட்டம் உயர்ந்திருப்பதால் குளத்திலிருந்து வாய்க்கால் வழியே நீர் செல்லும் வேகம் அதிகரித்திருக்கிறது. இதனால், வாய்க்கால்கள் நிரம்பி வழிந்து வீதிகளிலும் நீர்நிறைந்து காணப்படுகிறது.

இதனால், அங்கு பல வீதிகளில் போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருக்கின்றன.

- இவ்வாறு குளத்து நீர் வீண்விரயமாவதைத தடுப்பதற்கு நீர்ப்பாசனத் திணைக்களமும் ஏனைய தரப்பினரும் உடனடியாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று விவசாயிகள் கேட்டிருக்கின்றனர். (த-352)

## முல்லை. ஆஸ்பத்திரிக்கு ரி.வி., டெக் அன்பளிப்பு

புதுக்குடியிருப்பு,ஏப்.11

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு 'வேள்ட் விஷன்' நிறுவனம் ரி.வி., டெக் மற்றும் வீடியோ, ஓடியோத் தட்டுக்களை வழங்கியுள்ளது. (த-353)

## வீச்சு வலைகள் கையளிப்பு

அளம்பில்,ஏப்.11

முல்லைத்தீவு பங்குத்தந்தை அருட்திரு. ஜேம்ஸ் பத்திநாதரின் தலைமையின் கீழ் இயங்கும் 'முல்லை. நகர் மக்களின் மீள் கட்டமைப்பு நிதியம்' என்ற அமைப்பினால் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு முதற்கட்டமாக 200 வீச்சு வலைகளும் அதற்குரிய ஈயமும் வழங்கப்பட்டுள்ளன. அடுத்த கட்டமாக 400 வீச்சுவலைகள் வழங்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-416)

# சிறுபோக நெற்செய்கை கடும் மழையால் பாதிப்பு

தற்போது பெய்துவரும் மழையினால் ஒட்டுசுட்டான், கற்சிலைமடு பெரியகுளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கை பாதிப்படைந்துள்ளது.

இப்பிரதேசத்தில் நாற்பது ஏக்கருக்குமேல் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. விதைக்கப்பட்டதிலிருந்து தொடர்ந்து மழை பெய்துவருவதால் வயல்களில் நீர் தேங்குகிறது. இதனால், நெற்பயிர்கள் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது இம்மழையினால் புகையிலைச் செய்கையாளர்களும் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளனர். (த-341)




சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலய மாணவர்களுக்கு கெயர் நிறுவனம் உதவிப் பொருள்களை வழங்கியது.

அந்த உதவிப் பொருள்களை உதவிக்கல்விப் பணிப்பாளர் மு.தியாகராஜா மாணவன் ஒருவனுக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் வித்தியாலய அதிபர் ரீ.ராஜ்குமார் மற்றும் ஆசிரியர்கள் இருவரும் காணப்படுகின்றனர். *(படம்: அளம்பில் செய்தியாளர்)*

# வன்னேரிக்குளம் ம.வி. பொன் விழா இன்று

கிளிநொச்சி,ஏப்.11

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தின் பொன்விழாவும் புதிய கட்டடத் திறப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4மணிக்கு நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் சு.தர்மரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம், வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா, பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம்,கரைச்சி பிரதேச செயலர் செல்வி க.சுலோஜினி, கிளிநொச்சி திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.ம. பத்மநாதன், கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப் ப.மார்க்கண்டு, நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.சின்னராசா, கரைச்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.அரியரத்தினம், வைத்திய கலாநிதி ச.முருகானந்தன், வன்னேரி ம.வி. முதல் மாணவன் ச.கிருஷ்ணபிள்ளை, ஈ.ஜெகதீஸ்வரக் குருக்கள், அருட்திரு. ஜெயபாலன் அடிகளார் ஆகியோர் கலந்துகொள்வர். (த-305)

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

# விசுவமடுப் பிரதேசத்தின் அபிவிருத்தி குறித்து ஆராய்வு

பரந்தன்,ஏப்.11

விசுவமடுப் பிரதேசத்தை சிரமதானப்பணி மூலம் அபிவிருத்தி செய்தல் தொடர்பான கலந்துரையாடல் கடந்த 5ஆம் திகதி விசுவமடு மாவீரர் மன்டபத்தில் நடைபெற்றது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பொதுமக்கள், போராளிகள் இணைந்து பணிகளைச் செய்வது தொடர்பான பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

இந்தப் பிரதேச வீதிகளைத் திருத்தம் செய்வதற்கு இதுவரை அரசு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. குண்டும் குழியுமாக இருக்கும் வீதிகளைத் திருத்தம் செய்தல், தூர்ந்து போயுள்ள கழிவுநீர் கால்வாய்களைத் தூர்வையெடுத்து திருத்தியமைத்தல் போன்ற விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டன.

இச்செயற்றிட்டத்தை ஏனைய பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்க துறைகள்சார் திணைக்கள உத்தியோகத்தர்கள், போராளிகள், துறைசார் பொறுப்பாளர்கள் ஆகியோரிடையே கலந்துரையாடலை நடத்த ஏற்பாடு செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கிராம அபிவிருத்தியை மேம்படுத்துதல் தொடர்பான இக்கூட்டத்தில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணா, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் செந்தில், முல்லைத்தீவு மாவட்ட பொறுப்பாளர் அணியழகன், கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன், தமிழீழ காவல்துறை விசுவமடு பிரதேச பொறுப்பாளர் ரகுராம் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (த-352-204)

# விவசாய ஆராய்ச்சி நிலையத்துக்கு போதிய வாகன வசதிகள் இல்லை

பரந்தன்,ஏப்.11

கிளிநொச்சி இரணைமடுச் சந்தியில் ஆரம்பிக்கப்பிக்கப்பட்ட விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கு வாகன போதிய வாகன வசதிகள் என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால், விவசாய ஆராய்ச்சிப் பகுதியின் வேலைகள் பல சிரமங்களுக்கு மத்தியிலேயே மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இப்பகுதியில் விவசாயம் சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொண்டு விவசாயிகள் உயரிய விளைச்சலைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய பெரும் பொறுப்பு இந்த விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கே உரியதாகும்.

எனினும், அங்கு வாகன வசதிகள் இல்லாததால் விவசாய ஆராய்ச்சிப் பணிகளைத் துரிதமாக மேற்கொள்ள முடியாமல் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. (த-352)

# புலிகளுடன் அரசு பேச்சுக்களைத் தொடங்க கண்காணிப்புக்குழு அழுத்தம் தரவேண்டும்

## முல்லைத்தீவு வெகுஜன அமைப்புகள் மகஜர்

புதுக்குடியிருப்பு,ஏப்.11

விடுதலைப் புலிகளுடன் உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பித்து இடைக்காலத் தன்னாட்சி அதிகாரத்தை அரசு புலிகளிடம் கையளிப்பதற்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு நடவடிக்கை எடுக்கவேண்டும். புலிகளுடனான பேச்சைத் தொடங்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

முல்லைத்தீவு மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் ஊடாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவருக்கு அனுப்பிய மகஜரில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்படவேண்டும் என வலியுறுத்தி நேற்றுமுன்தினம் புதுக்குடியிருப்பில் பெரும் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்று நடைபெற்றது.

அப்பேரணியில், நாடாளுமன்ற உறுப்பினரிடம் கையளிக்கப்பட்ட மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த முப்பதாண்டு காலமாக ஏற்பட்ட போரினால், சீரழிவுக்குள்ளாகி அதிலிருந்து விடுபட்டு நிம்மதி பெறலாம் என்று தமிழ் மக்கள் எதிர்பார்த்தனர். புரிந்துணர்வு உடன்பாடு எதிர்பார்ப்புகளுக்கு மாறாக நாளும் செத்து மடிந்து கொண்டிருக்கிறது.

'பட்டகாலிலே படும்' என்பதற்கிணங்க ஆழிப் பேரலை ஏற்படுத்திய அழிவுகள் சோதனைக்கு மேல் வேதனையாகப் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தின. புரிந்துணர்வு உடன்பாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கூற்றுக்கள் எதனையும் ஸ்ரீலங்கா அரசு நடைமுறைப்படுத்தவில்லை. மாறாக, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் எதிராகக் கெடுபிடிகளைக் கட்டவிழ்த்து விட்டதோடு, இராணுவப் பலத்தை அதிகரிப்பதிலும், ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்வதிலும் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.

இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்தித் தருமென்ற எதிர்பார்ப்புக்கள் நீர்மேல் எழுத்தாயிற்று. ஆழிப்பேரலை அனர்த்தத்திலிருந்து மீண்டெள அனைத்துலக நாடுகளும் ஏற்றுக்கொண்ட பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுமென்ற எதிர்பார்ப்பும் தென்னிலங்கை அரசியலில் ஏற்பட்டிருக்கும் இழுபறிகளால் காலந்தாழ்த்தப்பட்டுக் கொண்டு செல்கிறது.

இந்நிலையில், தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தங்களின் அனுசரணையுடனான பேச்சை மேற்கொண்டு, இடைக்கால நிர்வாக அலகொன்றை அவர்களிடம் வழங்குவதன் மூலமே தற்போதைய நெருக்கடி நிலைகளுக்குத் தீர்வுகாணலாம் என்றும் இவ்வறிக்கை மூலம் வலியுறுத்துகின்றோம்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் போர் ஓய்வு ஏற்படுத்தப்படுமென்றும், அதன்மூலம் தமிழ் மக்களுடைய வாழ்வு இயல்பு நிலைக்குத் திரும்புமென்றும் இடம்பெயர்ந்து அல்லல்படும் தமிழ் மக்களை அந்தந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதென்றும் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அளவிடமுடியாத இழப்புக்களை பொதுக்கட்டமைப்பு ஒன்றினூடாக மீளளிக்கப்படுமென்றும் பல்வேறு ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களைந்தெடுப்பதென்றும் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இவ் உடன்பாடானது ஸ்ரீலங்கா இராணுவத்தின் மேலாதிக்க நிலைக்கு உயர்வாக விடுதலைப் புலிகளின் இராணுவபலம் உள்ளதென நிரூபிக்கப்பட்ட காலத்திலேயே செய்து கொள்ளப்பட்டது என்பது உலகறிந்த உண்மை.

புரிந்துணர்வு உடன்பாடு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் பூர்த்தியான நிலையில், அதனைச் செயற்படுத்தவேண்டுமென்று நாங்கள் பல தடவைகள் ஸ்ரீலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுத்தபோதும், அச்சரத்துக்கள் எதனையும் அரசு நிறைவேற்றத் தவறிவிட்டது. அதேவேளை, தமிழ் மக்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எதிராக அடுத்தடுத்து வடக்கிலும் கிழக்கிலும் கைதுகளும், சித்திரவதைகளும், கொலைகளும் அரசினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தாங்கள் அறிந்ததே.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழுகின்ற தமிழ் மக்கள் நின்மதியின்றி எப்போதும் பய உணர்வுடனே வாழும்நிலை ஏற்பட்டுள்ளது. அண்மைக் காலங்களில் கிழக்கு மாகாணப் பகுதியில் நாளாந்தம் கொலைகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளேயே ஆயுதக்குழுக்களுக்கு முகாம் அமைக்க அரசு அனுமதி கொடுத்ததுடன், பாதுகாப்பும் வழங்கி புலிகளுக்கெதிரான கொலை முயற்சிகளுக்கு அக்குழுக்கள் ஈடுபடுத்தப்படுகின்றன.

உயர்பாதுகாப்பு வலயமென இராணுவ முகாமகள் அமைந்த [illegible]ற்றாடல் பகுதிகளைப் பிரகடனப்படுத்தப்பட்டு தமிழ் மக்களின் வீடுகளை இராணுவம் சுவீகரித்துக் கொண்டிருக்கின்றது.

இந்நிலையில், சொந்த வீடுகளையுடைய மக்கள் இன்று முகாம் வாழ்க்கையைத் தொடரவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு மாறாக இராணுவப்பலத்தை அதிகரிக்கும் நோக்கோடு, இராணுவத்திற்குப் புதிதாக ஆள்கள் சேர்க்கப்படுகிறார்கள். ஆயுத தளபாடங்கள் தொடர்ந்து புதிதாகக் கொள்வனவு செய்யப்படுகின்றன. போர்க் கப்பல்களைக்கூட ஸ்ரீலங்கா அரசு கொள்வனவு செய்ததையும் தாங்கள் அறிவீர்கள்.

புரிந்துணர்வு உடன்பாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சை நடத்தி, இடைக்காலத் தன்னாட்சி அதிகார அலகொன்றை அவர்களிடம் கையளிப்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகும்.

இதுபற்றி தேர்தல் வாக்குறுதிகளிலும் ஜனாதிபதி சந்திரிகா அவர்களினால் உறுதியளிக்கப்பட்டது. ஆயினும், இது தொடர்பாக அனுசரணையாளராகத் தாங்கள் செயற்பட்ட காலத்திலிருந்து இதுவரையும் ஸ்ரீலங்கா அரசு எதையும் நிறைவேற்றிக் கொள்ளவில்லை.

ஜனாதிபதி முன்னுக்குப்பின் முரணான அறிக்கைகளை வெளியிட்டு வந்தமையும் ஊடகங்களினூடாக அனைவரும் அறிந்ததொன்று. இந்நிலையில், ஆழிப்பேரலை ஏற்படுத்திய அனர்த்தங்களை மீளளிப்பதற்கு பொதுக்கட்டமைப்பு ஒன்றையாவது உருவாக்கலாம் என தங்களாலும் ஏனைய சர்வதேச சமூகங்களினாலும் வலியுறுத்தப்பட்டுவந்தது.

அவ்வாறான பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கக்கூடிய தென்னிலங்கை அரசியல் இழுபறிநிலைமை இதுவரை இடம்கொடுக்கவில்லை. அதனால், ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டுமானப்பணிகள் தொடரமுடியாத இக்கட்டான நிலைக்கு உள்ளானது.

எனவே, பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் என்ற விடயத்தில் நாம் முற்றாக நம்பிக்கையிழந்துவிட்டோம். இந்நிலையில்தான் சமாதானத்தின் மீது முழு நம்பிக்கை வைத்திருக்கும் நாம், எம்மால் முழுமையாக அங்கீகரிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உடனடியாக பேச்சு ஒன்றை ஆரம்பித்து, இடைக்காலத் தன்னாட்சி அதிகாரத்தை அவர்களிடம் கையளிப்பதன்மூலமே இன்றைய இக்கட்டான சூழ்நிலைக்குத் தீர்வுகாணலாம் என்பதைத் தங்களிடம் பணிவுடன் சமர்ப்பித்து, அதற்கான நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்வீர் என எதிர்பார்த்து நிற்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-353)

## வட்டு. இந்துவில் கணனிப்பயிற்சி நெறி

வட்டு இந்துக் கல்லூரியில் இலவச கணனிப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கல்லூரியின் கணனிக் கற்றல் மையத்தில் நடத்தப்பட்டுவரும் இக்கணனிப் பயிற்சி வகுப்புகளில் சங்கானைக் கல்விக்கோட்டத்திற்குட்பட்ட அனைத்துப் பாடசாலை மாணவர்களும் கலந்துகொண்டு நன்மையடையலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பயிற்சி வகுப்புகளின் முடிவில் பரீட்சை நடத்தப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்படும்.(தரி)

## பதவி வெற்றிடம்

எமது நிறுவனத்தில் கீழ்க்காணும் வெற்றிடங்கள் உள்ளன.

1. படவரைஞர் (AUTOCAD)
2. வேலை மேற்பார்வையாளர்
3. களஞ்சியக் காப்பாளர்
4. இயந்திரவியல் முகாரி
5. மேசன்
6. பாதுகாப்பு ஊழியர்

1.2.3 - பதவிகளுக்குரிய விண்ணப்பங்களை எதிர்வரும் 22-04-2005 இற்கு முன்பு அனுப்பிவைக்கவும்.

4.5.6 - பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் அலுவலக நேரத்தில் நேரில் வந்து சந்திக்கவும்.

மனிதவள முகாமையாளர்,
யூரோவில்,
866, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

(44065)(26-14-45)

## வீடு வாடகைக்கு

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் விதானையார் ஒழுங்கை, சுண்டுக்குளிப் பகுதியில் மாடி வீடு வாடகைக்குண்டு. அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:
யுரோ மோட்டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிடெட்
844, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ. இல. 021 - 5780, 0777 325545.

(சி-42217)

## விற்பனைக்கு

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சுரிதார் துணி வகைகள், கவுண் கோட் துணி வகைகள், திருமணப் புடவைகள், புடவைகள், சுரிதார் லேடீஸ் கவுண் வகைகள், லேடீஸ் T சேட், ஸ்கேட் & பிளவுஸ், பான்சிப் பொருள்கள், ஒரிஜினல் கிறீம் வகைகள் என்பன நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்:

பபு கொமினிக்கேசன்
30, வளாக வீதி, திருநெல்வேலி.

(43916)

## ஆரம்பம் 11-04-2005

**SUBRA கல்வி நிறுவனம்** காலை 8.00

சித்தன்கேணி
**O/L Day Class**

"கல்வி உலகின் கலங்கரை விளக்கம் SUBRA"

| பாடம் | பிரிவு I | பிரிவு II |
|---|---|---|
| விஞ்ஞானம் | இரா.செல்வவடிவேல் | லக்மன் |
| கணிதம் | மகேந்திரன் | கனேந்திரன் |
| தமிழ் | S.P. சாந்தன் | கொங்கா |
| சமயம் | ராஜி | ராஜி |
| ஆங்கிலம் | உங்கள் ஆசான் | தவராஜா |
| சமுகக்கல்வி, புவியியல் | ஐங்கரன் | ஐங்கரன் |
| வர்த்தகம், அபிவிருத்தி | பாஸ்கரன் | பாஸ்கரன் |
| த. இலக்கியம் | காரை.எஸ்.கெங்கா | S.P. சாந்தன் |

தினமும் காலை 7.00 - 12.00 மணி வரை மாதாந்தப் பயிற்சிப் பரீட்சைகளும் மீட்டல்களும் கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு.

"நாளைய சந்ததியின் இன்றைய தெரிவு SUBRA மட்டுமே"
சரியானதைத் தெரிவு செய்யவேண்டும்

### 2007 புதிய பிரிவு

நிரந்தரமான வெற்றிக்கு SUBRA

| | |
|---|---|
| Eco. - ஜெயகுமார் | Tam. - காந்தன் |
| B.St. - நந்தீஸ் | H.C. - சிறீஸ் |
| Acc. - தவா சுபேஸ் | Log. -E.S. பவன் |
| | P.Sc. - அசோக் |
| Eng.- BRITTO | Geo. - ஐங்கரன் |
| C.Mat. - பிரதீபன் | Dra. - கனேஸ் |
| Che. - தபேசன் | Cri. - சுதர்சன் |
| | Bio. - தயாபரம், சுஜன் |

- ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.
- பாடத்திட்டம் பூர்த்தியாக்கப்படும்.
- கடந்த காலப் பெறுபேறுகளே எமது திறமைக்கு எடுத்துக்காட்டு.

புதிய பிரிவு ஆரம்பம்: 11-04-2005
திங்கள் மாலை 4.30 மணி.

(சி-42221)(26-14-45)

## விற்பனையாளர்கள் தேவை

புடவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் தேவை.
பழக விரும்புபவர்களுக்குக் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
44,42, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(44060)(24-14-45-26)

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல அச்சகம் ஒன்றுக்குப் பின்வரும் வேலையாளர்கள் தேவை.

- கிறபிக்ஸ் முன் அனுபவமுள்ள கணனி இயக்குநர்.
- ஓவ்செற் மெசின் உதவியாளர்.

உடன் தொடர்புகொள்ளவும்.
அமெரிக்கன் சிலோன் மிஷன் அச்சகம்
464, ஆஸ்பத்திரி வீதி.
(44050) யாழ்ப்பாணம்.

## வேலையாள்கள் தேவை

- சகல விதமான உணவு தயாரிப்பாளர்கள்
- ரீ மேக்கர்
- உணவு பரிமாறுபவர்கள் (சப்ளேயர்கள்)
- உதவியாளர்கள் தேவை.

உடன் தொடர்புகளுக்கு:
**கிரி ஹோட்டல்**
இல. 176, கஸ்தூரியார் வீதி,
(ராஜா தியேட்டர் முன்பாக),
யாழ்ப்பாணம்.

(44074)(26-14-45)

## தரம் 7 மாணவர்களுக்கான

புவியியல் - குடியியல் - வரலாறு
இணைந்த நூல் வெளிவந்துவிட்டது.
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
ஏகவிநியோகஸ்தர்:
கஜமுகன் புத்தகசாலை
சித்தன்கேணிச்சந்தி,
சித்தன்கேணி.

(சி-42220) (14-26-45)

## யாழ்ப்பாணத்தில் விமான ரிக்கெற்றுக்களுக்கும் விடுதி வசதிகளுக்கும் விசேட கழிவுகள்

### குறைந்த கட்டணத்தில் விமானச்சீட்டுக்கள்

உங்கள் விமானப் பயணங்களைத் தனித்துவமாகக் கையாள்கின்றோம்.

1. உள்நாட்டு, வெளிநாட்டு விமான ரிக்கெற்றுக்களுக்கும் அதன் முன்கூட்டிய பதிவுகளுக்கும்
2. விசா சம்பந்தப்பட்ட ஆவணங்கள்
3. விமானப் பயணிகளின் காப்புறுதி விவரங்கள்
4. ஐரோப்பிய நாடுகளிடையே புகையிரதங்களில் பயணிப்பதற்கான புகையிரதப் பயணச் சீட்டுக்கள்
5. விமான நிலையத்தில் போக்குவரத்து வசதிகள்
6. பயணிகள் காசோலை பற்றிய விவரங்கள்
7. உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயண ஏற்பாடுகள்
8. யாழ். கிளையால் மேற்கொள்ளப்படும் யாழ்ப்பாணத்துக்குள்ளேயான உல்லாசப் பயண வசதிகள்.

அனைத்துக்கும் உடனே நாடுங்கள்:

**AITKEN SPENCE OVERSEAS TRAVEL SERVICES (PVT) LTD**
**56/15, STANLEY ROAD, JAFFNA.**
021 222 3771
Mobile: 0777 915824.

(சி-42192)(26-14-45)

## புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் கிறிஸ்து வருடம் 2005ஆம் ஆண்டு சித்திரை மாதம் இன்று (11-04-2005) திங்கட்கிழமை நண்பகல் 12-06 மணி முதல் 1.36 மணி வரை வரும் சுபமுகூர்த்தவேளையில்

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

**கிரி ஹோட்டல்**

என்னும் கடை திறக்க இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து புதுக்கடையைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

176, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் முன்பாக).

தங்கள் நல்வரவை நாடும்:
திரு.சோதியும்
புதல்வர்களும் (சீலன்).

(44074)(26-14-45)

## 2 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



உதயசூரியன் - ஜெயபாரதி தம்பதிகளின் செல்லப் புதல்வன் கவிந்தன் சுவிற்ஸர்லாந்து (பாசல்) இல் உள்ள இல்லத்தில் இன்று (11-04-2005) திங்கட்கிழமை தனது 2 ஆவது பிறந்த நாளை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை சுவிஸ் பாசலில் உள்ள அப்பப்பா அம்மம்மா, அத்தான்மாரான கபில்(சுவிஸ்), விஜேத்(சுவிஸ்), பெரியப்பாவான அ.உமாகரன் (லண்டன்), பெரியம்மாவான தேவமோகனா (லண்டன்), அண்ணன்மார்களான பெஞ்சன் (லண்டன்), டெஸ்மன் (லண்டன்) மற்றும் சின்னமாமா கோபு(லண்டன்), சின்னத்தை சசிதேவி (லண்டன்) மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள அப்பம்மா அம்மாமாலை கமலாதேவி, உடுப்பிட்டி குடும்பி சித்தாவான அ.சந்திரமோகன் உடுப்பிட்டி மற்றும் நுணாவில் வடக்கைச் சேர்ந்த அம்மையா ஜெயரட்ணம், அம்மம்மா சுமனா, மாமன்மாரான ஜெகன்(லண்டன்), காந்தன், சித்தப்பாவான நிர்மல், சித்தியான சுதா மற்றும் பிரதா, பிரபா, சின்னக்காமார்களான சந்தியா, சாளினி ஆகியோர் சகல கலைகளும் பெற்றுப் பெருவாழ்வு வாழ கவிந்தனை வாழ்த்துகின்றனர்.

தகவல்:
அப்பம்மா
அ. கமலாதேவி,
உடுப்பிட்டி.

(43955)(51-14-17-45-18-16-26)

செல்வன்
கவிந்தன்
11.04.2005

Happy Birthday

## நன்றி நவில்கின்றோம்

2004 டிசெம்பர் மாதம் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு உயர்பெறுபேறுகளைப் பெறுவதற்குச் சிறந்த முறையில் கற்பித்து எம்மை ஊக்குவித்த நியூபிறைற் கல்வி நிறுவன ஆசிரிய குழாமிற்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**2004 O/L மாணவர்கள்.**

(44067)(26-14-45)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் கடந்த 12 வருடங்கள் நிதி உதவியாளராகவும் நிர்வாக உத்தியோகத்தராகவும் திறமையாகக் கடமையாற்றி இன்று வேலணைப் பிரதேச சபையின் செயலாளராகப் பதவியேற்கும்

உயர்திரு.
**கைலைநாதன் மகேந்திரலிங்கம்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர் மேன்மேலும் சிறப்புற்று திகழ சழத்துச் சிதம்பரத்தில் உறைகின்ற எல்லாம்வல்ல எம்பெருமானை வேண்டுகின்றோம்.

பிரதேச செயலகம், காரைநகர்.
சமுர்த்தி உத்தியோகத்தர்களும், கிராமசேவையாளர்களும்.

(சி-42224)(26-14-45)

# பன்றித்தலைச்சி அம்மனின் பேருளில் தோன்றி வளர்ந்த சித்தர் பரம்பரை

ஈழநாட்டிலே பெருமை மிகுந்த வழிபாட்டுத் தலங்கள் பல இருக்கின்றன. இவற்றிலே பன்றித்தலைச்சி அம்மன் திருத்தலம் மிகவும் பிரசித்திபெற்றது.

பங்குனி மாதம் பொங்கல் செய்தும், படையல் செய்யும் அடியார்களினால் பெருமை பெறுகின்றது. பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம் பன்றித்தலைச்சி எனப் பெயர்வரக் காரணமாக கர்ண பரம்பரைக் கதை ஒன்று உண்டு.

கோயில் அருகே பனை வடலிகள் நிறைந்த காணிகள் உள்ளன. பனை வடலிகள் கூட்டத்தில் இருந்த மாட்டுத் தொழுவத்தில் நின்ற பசு ஒன்றை கொன்ற ஒருவர் அதன் இறைச்சியை எடுத்துக்கொண்டார்.

பசுவின் எஞ்சிய பாகங்களான தலையையும் தோலையும் பற்றை அருகே புதைத்துவிட்டுக் கொண்டார். மாட்டுச் சொந்தக்காரர் இதனை அறிந்து நீதிமன்றம் சென்றார். மாட்டினைக் கொலை செய்தவர் அம்பாளை வழிபாடு செய்துவிட்டு நீதிமன்றம் சென்றார்.

மாட்டுத்தலை பன்றித்தலையாகக் காட்சி கொடுத்தது. அன்றுமுதல் பன்றித்தலைச்சி எனப் பெயர் பெற்றது. இவ் ஆராய்வின் விரிவு சாவகச்சேரி வித்துவான் பொன்னம்பலம் 1934இல் எழுதிய நூலில் கூறப்பட்டுள்ளது.

பன்றித்தலைச்சி அம்மன் ஆலய வரலாறு இன்றுவரை பூரணமாக எழுதப்படவில்லை. 1750ஆம் ஆண்டு நாகர் கதிர்காமர் எனபவரால் இவ் ஆலயம் கட்டப்பட்டது என்ற செய்தியை கி.பி. 1884ஆம் ஆண்டு யாழ். செயலக பதிவிலுள்ள குறிப்பு காட்டுகின்றது. எனினும் பூர்வீக காலம் எவராலும் அறிய முடியாது இருக்கிறது.

இங்கு 1910ஆம் ஆண்டு 2ஆவது பங்குனித்திங்கள் செல்லப்பா சுவாமிகளினால் யோகர் சுவாமிகளுக்குத் திருவடி தீட்சை கிடைத்தது. இந்தச் செய்தியைக் காலஞ்சென்ற வடமாநிலப் பணிப்பாளர் இரத்தினம்மா செல்லையா நவரத்தினம் அம்மையார் மிக அழகாக எழுதியுள்ளார்.

மேலும், இச்செய்தியை அம்மையார் எழுதிய யோகர்சுவாமியின் நூற்றாண்டு மலரின் ஆங்கில நூலில் இடம்பெற்றுள்ளது.

1958ஆம் ஆண்டு சிங்களவர், தமிழர் யுத்தம் ஏற்பட்டது. அப்போது யோகர் சுவாமிகள் தமது திருக்கூட்டத்தாருக்கு ஒரு அறைகூவல் விடுத்திருந்தார். பன்றித்தலைச்சிக்குச் செல்லுங்கள். சங்காபிஷேகம் செய்யுங்கள் என்பதே அந்த அறைகூவல்.

அந்தக் கூட்டத்தில் பிரபல முக்கியஸ்தர்கள் இடம்பெற்றுள்ளனர். அரச அதிபர் ஸ்ரீகாந்தா அவர்களிடம் யோகர் சுவாமிகள் 'நீங்கள் பண்டிதமணியை அழைத்துச் சென்று சங்காபிஷேகத்திற்கு சங்கற்பம் செய்யுங்கள்' என்று கட்டளையிட்டார்.

நாவலர் பரம்பரையில் வாழ்ந்த பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை யோகர்சுவாமிகளின் கட்டளைக்கு அடிபணிந்தார். இனக்கலவரமே

கா.சிவபாலன்

நின்றது. அன்று யோகர் சுவாமிகள் 'அடே 2000ஆம் ஆண்டு இந்த உலகமே அழியப் போகின்றது' என்றார். இதை யாருமே அன்று நம்பமுடியாமல் இருந்தது. அவரது திருக்குறிப்புக்கு ஏற்ப 2000ஆம் ஆண்டு மே மாதம் தென்மராட்சியில் பேரழிவு யுத்தம் ஏற்பட்டது. இதனால், மட்டுவில் தலம் உள்ளிட்டு தென்மராட்சியே பேரழிவைச் சந்தித்தது. இந்த அழிவைப் பற்றி யோகர் சுவாமிகளே கூறிவிட்டார். நாம் அறியவில்லை.

இந்தச் சித்தர் பரம்பரையின் தொடர்பாக யோகர் சுவாமிகளின் திருக் கூட்டம் இன்று உலா வருகின்றது. 2ஆவது பங்குனித்திங்கள் என்றால் யோகர் சுவாமிகளின் சிவதொண்டன் அடியார்கள் அனைவருமே வருகை தருவார்கள்.

இதே போன்று இணுவில் சச்சிதானந்த சுவாமிகளின் தொடர்பும் ஆராயப்படவேண்டியது. இக்கோயிலின் அறங்காவலர் சி.செல்லத்துரையின் பாரியாரே கைதடி செல்லம்மா அம்மையார்.

கைதடி செல்லம்மா சச்சியானந்தம் அம்மையார் பற்றிய வரலாறு 'யார் இந்த செல்லம்மா' என்னும் பெயரில் வெளிந்துள்ளது.

எனவே, இனிவரும் காலங்களில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்துடன் ஈழத்துச் சித்தர்கள் பற்றிய சிந்தனைகள் ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

## பக்தி சிரத்தையுடன் சகலரும் அண்டி அருள் பெறும் அன்னை

ஈழவள நாட்டின் வடபால் யாழ்ப்பாணம் மட்டுவிலில் புதுமைமிக்க பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம் விளங்குகின்றது. ஈழத்தின் கண்ணுள்ள பழைமை மிக்க பதிகளாகிய கதிர்காமம், நல்லூர், நயினை, வல்லிபுரம், சந்நிதி என்பவற்றோடு பொருந்த மட்டுவிலில் அமர்ந்து அருள் பாலிக்கும் அற்புதக் கோயிலாகப் பன்றித்தலைசசி விளங்குகின்றாள். அகில இலங்கை மக்களும் பக்தியுடன் வழிபடும் பழம்பெருமை மிக்க தலம். சைவமும் தமிழும் தழைத்தோங்கும் தலம்.

இத்தலம் ஆரம்பித்த காலம் பற்றித் திட்டவட்டமாக அறியமுடியவில்லை. ஆயினும், இப்போது கிடைத்திருக்கும் காணி உறுதியின்படி கி.பி.1750இல் நாகர் கதிர்காமர் என்பவரால் அமைக்கப்பட்டுப் பரிபாலித்ததாக அறிய முடிகின்றது. இத்தலம் சுமார் 240 வருடங்களுக்குப் பின் 1989இல் புதுப்பிக்கப்பட்டு 1991ஆம் ஆண்டில் குடமுழுக்குச் செய்யப்பட்டது.

பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் என இப்போது வழங்கப்பட்டுவரும் இந்த ஆலயத்தின் பெயர்களில் சிறப்பான கதைகள் வழங்கிவருவதை நாம் அறியமுடிகின்றது. முன்பொருகால ஒரு ஏழைக்காக மாட்டுத் தலையைப் பன்றித்தலையாக்கியதால் பன்றித்தலைச்சி என்ற பெயர் ஏற்பட்டது. கோவலன் கொலையுண்டதால் சீற்றமுற்ற கண்ணகி மதுரையை எரித்துவிட்டுத் தனது கோபம் தணியும் பொருட்டுத் தங்கிச் சென்ற இடம் என்பதால் 'கண்ணகை' என வழங்கியதாகவும் கர்ண பரம்பரைக் கதைகள் மூலம் அறியக்கிடக்கின்றது. இத்தகைய சிறப்பும் கீர்த்தியும், தெய்வீக ஆற்றலும் கொண்ட அன்னை பங்குனி மாதத்தில் வந்து தங்கியதால் பங்குனி மாதத்தில் பொங்கல், படையல், காவடி, பாற்செம்பு போன்ற நேர்த்திகளை நிறைவேற்றி மக்கள் வழிபட்டனர்.

பங்குனிமாதம் பிறந்துவிட்டால் மட்டுவில் கிராமம் புனித கிராமமாக மாறிவிடும். ஏன் இலங்கையின் பெரும் பகுதி மக்கள் இவ்வாலயத்தில் கூடி பொங்கிப் படைத்து உண்டு

க.ஈஸ்வரன்
செயலாளர்,
மட்டுவில் இந்து இளைஞர் மன்றம்

களித்துச் செல்லும் தலமாகச் சிறப்புப் பெற்று விளங்குகின்றது. பங்குனி நாளில் அதிகாலையில் எழுந்து ஆலயத் தீர்த்தக் கேணியில் நீராடி முறைப்படி விரதமனுட்டித்து வழிபாடியற்றியே தத்தம் வேலைகளுக்குச் செல்வர். அரச உத்தியோகத்தர்கள், படையினர், பொலீஸார் கூட இவ் ஆலயத்தின் மீது பக்தி சிரத்தையுடன் நடந்துகொள்வதை ஆலயச் சூழலில் காணமுடிகின்றது.





பிரிட்டனின் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் தனது நீண்டநாள் காதலி கமீலா பர்கரை நேற்றுமுன்தினம் திருமணம் செய்துகொண்டார். வின்சர் நகர மண்டபத்தில் மிகவும் எளிமையான முறையில் நடைபெறற திருமண வைபவத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையானோரே கலந்துகொண்டனர்.

திருமணத்தின் பின்னர் சார்ள்ஸும், கமீலாவும் மகிழ்ச்சி பொங்க கை அசைப்பதையும், விருந்தினர்களோடு கைலாகு கொடுத்து அளவளாவுவதையும், தேவாலயத்திலிருந்து வெளியேறுவதையும் படங்களில் காணலாம்.

உலக அரங்கில்

## இஸ்ரேல் ஜனாதிபதியுடன் தான் கைகுலுக்கவில்லை

### மறுக்கிறார் ஈரான் ஜனாதிபதி

தெஹ்ரான்,ஏப்.11

இஸ்ரேல் ஜனாதிபதியுடன் கைகுலுக்கியதாக வெளிவந்திருக்கும் செய்திகளை ஈரான் ஜனாதிபதி முகம்மது கதாமி மறுத்துள்ளார். மறைந்த பாப்பரசரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட கதாமி, அங்கு வந்திருந்த இஸ்ரேல் ஜனாதிபதியைச் சந்தித்துக் கைகுலுக்கினார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தச் செய்தியை மறுத்தே கதாமி மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார். ஈரானில் பிறந்த இஸ்ரேல் ஜனாதிபதி மோஷ்கட்சேவ், பாப்பரசரின் இறுதிச்சடங்கின்போது சிரியா, ஈரான் நாட்டுத் தலைவர்களைச் சந்தித்துக் கைகுலுக்கினார் என்று தெரிவித்துள்ளார்.

ஆனால், நான் இஸ்ரேல் ஜனாதிபதியைச் சந்திக்கவோ, பேசவோ, கைகுலுக்கவோ இல்லை என கதாமி திட்டவட்டமாக மறுத்துவிட்டார்.

(ஐ-க)

## பாகிஸ்தான் ராஜதந்திரியை பக்தாத்தில் காணோம்!

லண்டன்,ஏப்.11

ஈராக்கில் பணியாற்றிய பாகிஸ்தான் ராஜதந்திரியான மலிக் மொகம்மட் ஜாவிட் கடந்த சனிக்கிழமை முதல் காணாமல் போயுள்ளார் என பாகிஸ்தான் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

அவர் குறித்த மேலதிக தகவல்கள் எதுவும் பெறப்படவில்லை. சிலவேளைகளில், அவர் கடத்தப்பட்டிருக்கலாம் எனவும் அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் ராஜதந்திரியான மலிக்மொகம்மட் ஜாவிட் ஈராக் தலைநகர் பக்தாத்தில் வைத்தே காணாமல் போயுள்ளார் என பாகிஸ்தான் உறுதியாகக் கூறியபோதும், பக்தாத் அதிகாரிகள் அவர் குறித்த எதுவித விவரங்களும் தமக்குத் தெரியாது என அறிவித்துள்ளனர்.

ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதன் பின்னர் அதிக எண்ணிக்கையான வெளிநாட்டவர்கள் இவ்வாறு கடத்தப்பட்டுள்ளனர்.

கடத்தப்பட்டவர்களுள் பலர் கொலைசெய்யப்பட்டுள்ளனர். சிலர் கிளர்ச்சிவாதிகளின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டபின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-க)

## நேபாளத்தில் சமர்; 100 பேர் பலி!

லண்டன்,ஏப்.11

நேபாள அரசப் படையினருக்கும் மவோயிஸட் தீவிரவாதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட கடும் மோதலில் மூன்று படையினர் அடங்கலாக நூறு பேர் உயிரிழந்தனர் என நேபாள அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேபாளத்தின் கிழக்கு மாகாணத்தில் பின் தங்கிய பிரதேசமான ருகுமில் கடந்த வியாழக்கிழமை இருதரப்பினருக்கும் இடையில் மேற்படி மோதல் ஏற்பட்டதென தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோதலின் பின்னர் 47 மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் சடலங்கள் நேற்றுமுன்தினமும் 50 தீவிரவாதிகளின் சடலங்கள் கடந்த வெள்ளிக்கிழமையும் கண்டெடுக்கப்பட்டன எனப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

மன்னர் ஜியானேந்திரா ஆட்சிப்பொறுப்பை ஏற்றதன் பின்னர் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கு எதிரான மோதல் உக்கிரமடைந்துள்ளது. அவர் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் ஏற்பட்ட மிகப்பெரிய மோதல் சம்பவம் இதுவாகும் என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

சுமார் 10 வருடங்களாக மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கும் அரசுக்கும் இடையிலான மோதல் காரணமாக 11 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனா என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-க)

## மனித உரிமைமீறல் அதிகரிப்பு நேபாளத் தலைவர்கள் கவலை

காத்மண்டு,ஏப்.11

நேபாளத்தில் மனித உரிமை மீறல்கள் உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டதாக அந்த நாட்டு அரசியல் தலைவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். நேபாள அரசியல் தலைவர்களான கிரிஜா பிராசாத் கொய்ராலா, ஷெர்பகதூர் துபா, ஜால்நாத் கனல் ஆகியோர் கூட்டாக இணைந்து வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நேபாளத்தில் எதேச்சதிகாரமாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றமன்னர் ஜியனேந்திராவின் அரசும், மாவோயிஸ்ட் தீவிரவாதிகளும் மனித உரிமைகளை மீறும் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்கும் அமைப்புகள் செயலாற்றுகின்றன மனித உரிமை மீறல்கள் உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டன.

சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழுவை ஐக்கிய நாடுகள் சபை நியமிக்க வேண்டும்.

-இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-க)

## அணுவாயுதத்தைப் பெற முயற்சி

ஒஸ்லோ,ஏப்.11

அல்கெய்டா இயக்கமும், ஏனைய தீவிரவாத இயக்கங்களும் அணுவாயுதங்களைப் பெற்றுக்கொள்ள முயற்சிசெய்து வருகின்றன வென்று ஐக்கியநாடுகள் அணுசாசனக் கண்காணிப்புத் தலைவர் தெரிவித்தார் என நோர்வே தொலைக்காட்சியொன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

அணுவாயுதங்களையும் மற்றும் பேரழிவு தரும் ஆயுதங்களையும் கொள்வனவுசெய்ய தீவிரவாத அமைப்புகள் பெரும் முயற்சி எடுத்து வருவதாக சர்வதேச அணுசக்தி தாபனத்தின் தலைவர் மொகம்மட் அல்-பராதே பெய்ஸியாத் தலைநகர் வியன்னாவில் வைத்துத் தெரிவித்தார்.

அங்கு அவர் வழங்கிய விசேட செவ்வியொன்றிலேயே இவ்வாறு கூறினார்.

(ஐ-க)

## ஆசார்யபிஷேக அழைப்பு

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் பங்குனி மாதம் 29 ஆம் நாள்
இன்று (11.04.2005) திங்கட்கிழமை பரணி நட்சத்திரமும்
திருதியை திதியும் சித்தயோகமும் கூடிய
காலை 10.15 மணிமுதல் 11.30 மணிவரை உள்ள சுபமுகூர்த்தத்தில்

*எமது ஜயேஷ்ட புத்திரன்*

**பிரம்மஸ்ரீ**

**வ.கோபாலகிருஷ்ண சர்மாவுக்கு**

கரவெட்டி, தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய முகப்பு மண்டபத்தில் திருவருள் துணையுடன் சிரேஷ்ட சிவாச்சாரியார்களின் ஆசீர்வாதத்துடன் ஆசார்யபிஷேகம் செய்ய நிச்சயிக்கப்பட்டுள்ளது.
இவ்வைபவத்தில் குடும்ப சமேதரராகச் சமுகம் தந்து
ஆசார்யத்துவத்துக்கு எமது புத்திரனை ஆசீர்வதித்து
ஊக்கம் தரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

**தீக்ஷா குரு:-**

**சிவாச்சார்ய திலகம்**

**சிவஸ்ரீ மு.பரமசாமி குருமணி**

(நயினை நாகபூசணி அம்மன் தேவஸ்தான பிரதமகுரு)

தச்சன்தோப்பு சிந்தாமணி,
விநாயகர் ஆலய பரிபாலனசபை,
கரவெட்டி.

**தங்கள் சமுகத்தை நாடும்:**
**இரங்க. வரதராஜாக் குருக்கள்**
**(தேவஸ்தான பிரதமகுரு)**
**கௌரி தம்பதிகள்.**

(சி-42238) (30-14-18-24)

Institute of Informatics Studies
\# 100, Clock Tower Road,
Jaffna.
T.P. No. 021 222 2831

**IIS உடன் இணைந்து கொள்ளுங்கள்**
**அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்**

10ஆவது ஆண்டின் சேவையில் காலடி பதித்துள்ள எமது நிறுவனம் கடந்த 9 ஆண்டுகளில் தகவல் தொழில்நுட்பத் துறையில் யாழ் மாவட்டத்தில் பெரும்பங்கினை ஆற்றியுள்ளது யாவரும் அறிந்ததே. அந்த வகையில் இவ்வாண்டில் தனது சேவையினை மேலும் விஸ்தரிக்கும் நோக்கில் கணனித்துறையில் பல பயன்மிகு சிறப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது. இதன் முதற்கட்டமாக எமது நிறுவனத்தின் சேவைகளை குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் ஒரு கட்டமைப்பினை உருவாக்கவுள்ளோம்.

யாழ் மாவட்டத்தில் உள்ள கணனிக்கல்வி நிறுவனங்கள் தமது நிறுவனத்தின் தரத்தினையும் உறுதித் தன்மையினையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு ஏற்றவகையில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களை வழங்குவதற்கு IIS நிறுவனம் வழி சமைக்கின்றது. இதன் முதற் கட்ட நடவடிக்கையாக கீழ்க்குறிப்பிட்டுள்ள பிரதேசங்களை மையப்படுத்தி செயற்பாடுகள் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

i) சாவகச்சேரி
ii) மானிப்பாய்
iii) சுன்னாகம்
iv) அச்சுவேலி
v) தீவகம்
vi) திருநெல்வேலி/உரும்பிராய்
vii) கொக்குவில்/கோண்டாவில்
viii) வட்டுக்கோட்டை/சங்கானை
ix) கிளிநொச்சி
x) மூளாய்/ காரைநகர்/ கைதடி/ நாவற்குழி

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் கணனிக்கல்வி நிறுவனங்களை நடார்த்துவோர்/ புதிய முதலீடுகளை மேற்கொள்ள விரும்புவோர் எம்முடன் இணைந்து செயற்பட முடியும்.

**IIS இன் இச்செயற்பாட்டில் பங்காளர்களாக விரும்பும் நிறுவனங்கள் இயக்குநருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.**

**09.04.2005 ஆம் நிகழ்ந்த உத்தியோகபூர்வ ஏழுதல்**

12 53 61 62 08

73,65,200/-

**இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 73,65,200/-**

300203589-4-04
300211630-0-04
300208438-0-30
300204262-0-08
300212642-0-30

# நிலவு.COM இன்
## தமிழ் கணனி 2005

## கண்காட்சியும் கருத்தரங்கும்

இன்று (11.04.2005) திங்கட்கிழமை காலை 9.00 மணி
முதல் மாலை 7 மணிவரை.

இடம்: யாழ்.இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

**இக்கண்காட்சி இன்று மட்டுமே!**

ஊடக அனுசரணை: உதயன்
(சி.42231) (39-14-18-24)

## மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



தீவகம் வடக்கு. ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் கடந்த 12 வருடங்களாக நிதி உதவியாளராகவும், நிர்வாக உத்தியோகத்தராகவும் திறமையாக - நேர்த்தியாகக் கடமையாற்றி இன்று திங்கட்கிழமை வேலணைப் பிரதேச சபையில் செயலாளராகப் பதவியேற்கும்

**உயர்திரு.கைலைநாதன் மகேந்திரலிங்கம்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன். அவர் மேன்மேலும் சிறப்புற்றுவாழ இறைவனை இறைஞ்சுகிறோம்.

*5, பிரதான வீதி,*
*வங்களாவடிச் சந்தி, வேலணை.*
(44089) (24-14-18)

உரிமையாளரும்,
ஊழியர்களும்
ஆஞ்சநேயர் ரோடர்ஸ்.

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பி இரத்தினம்

இணுவில் மேற்கைச் சேர்ந்த திருமதி தம்பி இரத்தினம் 08-04-2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பி (விவாகப் பதிவாளர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா, காலஞ்சென்ற மாசிலாமணியின் அன்புச சகோதரியும் காலஞ்சென்ற சுவேஸ்வரதம்பி (கச்சேரி, யாழ்ப்பாணம்), தம்பி இரத்தினசோதி, குகன் அருள்தம்பி, கேதீஸ்வரதம்பி ஆகியோரின் அன்புத் தாயாரும் லதாராணி, விபுலானந்தராசா, சறோயினி, பிறிந்தா ஆகியோரின் மாமியாரும் ஜெயபாரதி, அரவிந்தன், துஷியந்தி, சிவகஜன், உமாசுதன், முரளிகிஷ்ணா, மாதங்கி, சுபாங்கி, பார்த்தன், ஞாஷதி, ஆரணி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-04-2005) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.* (44090) (24-14-18)

தகவல்:
விபுலானந்தராசா கேதீஸ், குகன்.

# விற்பனைக்கு



**DISH TV PACKAGE மற்றும்**
**EURO STAR PACKAGE**
**KU BAND DISH**
**ANTENNAகள்**

| | | |
|---|---|---|
| DISH TV PACKAGE RECEIVER KU DISH | 75 CHANNELS | Rs. 20,000/- |
| EURO BOX ALBA BOX EURO LINE KU DISH 65 cm | 35 CHANNELS | Rs. 13,500/- முதல் |

**DISH TV PACKAGE மற்றும்**
**EURO STAR DISH களில்**
**யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்:**

# ஜமுனா ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி,
நெல்லியடி.

**T.P.: 2263970, 0777 730332**

(44091)(24-14-18)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

**வேலணை வைத்திய கலாநிதி**
**சி.இராசரத்தினம்**
**121, 2ஆம் குறுக்குத் தெரு,**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி எண் 2459**

(44077) (24-14-18)

## சமய சந்நிதிகளில்

மல்லாகம் பழம்பதி திருமுருகன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 18 நாள்கள் இடம்பெறவுள்ள இந்த உற்சவம் எதிர்வரும் 26ஆம் திகதி பூர்த்தியடையும்.(எ-86)

✦✦✦

சித்தன்கேணி நாககன்னி அம்பாள் ஆலய வருடாந்தப் பங்குனித் திங்கள் அஷ்டோத்திர (108)சங்காபிஷேக விழா இன்று திங்கட்கிழமை காலை 7.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் "சங்காபிஷேகமும் பலனும்" என்னும் தலைப்பில் வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் செ.கந்த சத்தியதாசனும் "அம்பிகையின் திருவருளும் திருத தோற்றமும்" என்னும் தலைப்பில் சைவப புலவர் நித்திய தசீதரனும் சொற்பொழிவாற்றவுள்ளனர். (3-78-13)

✦✦✦

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இந்த உற்சவத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த் தோற்சவமும் நடைபெறும். (எ-73-203)

✦✦✦

யாழ். போதனா வைத்தியசாலையினுள் அமைந்துள்ள ஞானவைரவர் ஆலய பரணி உற்சவத்திருவிழா இன்று திங்கட்கிழமை நண்பகல் 12மணிக்கு நடைபெறவுள்ளது.

விசேட அபிசேக ஆராதனைகள் இடம்பெற்று வைரவப்பெருமான் வீதியுலா வருதல் நிகழ்வும் இடம்பெறும். (3-ரி-203)

✦✦✦

தொல்புரம் கொட்டியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்மன் ஆலய திருக் குளிர்த்திப் பெருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

விசேட திருக் குளிர்த்தி அபிசேக ஆராதனைகளைத் தொடர்ந்து அம்பிகை திருவீதியுலா வருதல் நிகழ்வு இடம் பெற்று, நண்பகல் மாகேஸ்வரப் பூசையும் நடைபெறும்.(3-ரி-203)

✦✦✦

அரியாலை ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. விசேட அபிசேக ஆராதனைகளும் பூசைகளும் திருவிழாக்காலங்களில் நடைபெறும். (3-203)

✦✦✦

மானிப்பாய் சோதி வேம்படி காளி அம்பாள் ஆலய வருடாந்த வசந்த நவராத்திரி உற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்த உற்சவத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை அம்பாள் நகர் வீதியுலா வருதல் நிகழ்வும் இடம் பெறும். (3-90-203)

✦✦✦

சரவணை கிழக்கு பாலக்காடு அருள்மிகு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய பொங்கல் விழாவும் தீ மிதிப்பும் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளன. மு.ப.11 மணிக்கு அம்பாளுககு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று, மாலை 7 மணிக்கு பொங்கல் விழாவும் தீ மிதிப்பும் இடம்பெற்று அம்பாள் வீதியுலா வருவார். (3-203)

உதயன் ஊடக அனுசரணையுடன் நடக்கும்

# எல்லைப்படை மாவீரர் நினைவு உதைபந்தாட்டம்: கால் இறுதி ஆட்டங்கள் இன்று பூர்த்தியாகின்றன



யாழ்ப்பாணம்,ஏப்.11

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவுடனும் 'உதயன்' ஊடக அனுசரணையுடனும் வலிகாமம் லீக் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கால் இறுதி ஆட்டங்கள் இன்று பூர்த்தியாகின்றன.

யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களைச் சேர்ந்த 57 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றிய இந்தச் சுற்றுப்போட்டி கடந்த மாதம் 16 ஆம் திகதி ஆரம்பமாகியது.

முதலாம், இரண்டாம், மூன்றாம் சுற்றுக்களாக நடந்த இச்சுற்றுப் போட்டி இன்று பூர்த்தியாகிறது.

அரையிறுதி ஆட்டங்களும் இறுதியாட்டமும் மின்னொளியில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரையிறுதியாட்டங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள நான்கு அணிகளும் மோதி இறுதியாட்டத்தில் மோதும் அணி தெரிவுசெய்யப்படும்.

அரையிறுதி ஆட்டங்களும் இறுதியாட்டமும் நடைபெறும் தினங்கள் இன்னமும் முடிவுசெய்யப்படவில்லை.

இன்று இடம்பெறும் கால் இறுதியாட்டத்தில் மோதும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 4 மணி - பொமோ்ஸ் வி.க. எதிர் சென்.மேரிஸ் வி.க.

★ மாலை 5 மணி - மணற்காடு அன்ரனீஸ் வி.க. எதிர் மனோகரா வி.க.

(3-86)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.11

யாழ். 51 ஆவது படைப்பிரிவின் அனுசரணையுடன் படைப்பிரிவுகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்.பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் 11 ஆவது சிங்கப் படைப்பிரிவும் 6 ஆவது காலாட்படைப்பிரிவும் மோதுகின்றன. (3-190)

## தொடர்புகொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.11

மேஜர் மாறன் நினைவாக எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ள கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் கரபந்தாட்ட லீக்குடனும் பாடசாலைகள் வலய உடற்பயிற்சி உதவிக் கல்விப் பணிப்பாளர்களுடனும் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்டப் பிரிவு கேட்டுள்ளது. (3)

## உள்ளக விளையாட்டு நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.11

யாழ்.வை.எம்.சி.ஏ. வருடா வருடம் அங்கத்தவர்களுக்கு இடையில் நடத்திவரும் உள்ளக விளையாட்டுப் போட்டிகள் நாளை பிற்பகல் 3 மணிக்கு சுண்டுக்குழி மகளிர் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் ஆரம்பமாகின்றன.

நாளைமுதல் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை பட்மின்ரன் போட்டிகள் இடம்பெறவிருக்கின்றன. (3-190)

வலி.தெற்குப் பிரதேச கரபந்தாட்டம்:

# இணுவில்,மயிலணி அணிகள் வெற்றி பெற்றுச் சம்பியனாகின



வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற கரபந்தாட்ட இறுதிப்போட்டியில் கலந்துகொண்ட ஆண்கள், பெண்கள் அணிகள் மோதிக்கொள்ளும் காட்சிகளைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

வலி.வடக்கு,ஏப்.11

வலி.தெற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற ஆண்கள், பெண்களுக்கான கரபந்தாட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் இணுவில் இந்து விளையாட்டுக் கழகமும் பெண்கள் பிரிவில் சுன்னாகம் மயிலணி வளர்பிறை விளையாட்டுக் கழகமும் சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டன.

உடுவில் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் இப்போட்டிகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

பெண்களுக்கான இறுதிப்போட்டியில் சுன்னாகம் வளர்பிறை விளையாட்டுக்கழகமும் இணுவில் இந்து விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

மூன்று நேர்போட்டிகள் கொண்ட இப்போட்டியில் வளர்பிறை விளையாட்டுக் கழகம் நேர் இரு போட்டிகளில் 25:6, 25:0 என்ற புள்ளிகளினால் இணுவில் இந்து விளையாட்டுக்கழகத்தை வென்று சம்பியனாகியது.

ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் இணுவில் இந்து விளையாட்டுக்கழகமும் மல்லாகம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாக விளையாடின. ஐந்து சுற்றுக்கள் கொண்ட இந்த ஆட்டத்தில் இணுவில் இந்து விளையாட்டுக்கழகம் 25:17, 25:23, 27:25 என்ற மூன்று நேர் செற்றுக்களினால் ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத்தை வென்று சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. (3-86)

# நல்லூர்ப் பிரதேச செயலக பெருவிளையாட்டு முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.11

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்படப் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் இடம்பெற்ற பெருவிளையாட்டுகள் பூர்த்தியாகியுள்ளன.

இந்தப் போட்டிகளில் வெற்றிபெற்ற கழகங்களின் விவரம் வருமாறு:-

**கிரிக்கெட்**

ஆண்கள் - லெவின்ஸ்ரார் வி.க., அரியாலை ஐக்கிய வி.க.

பெண்கள் - கொக்குவில் மத்திய சனசமூக நிலைய வி.க., துர்க்கா வி.க.

**கரபந்தாட்டம்**

ஆண்கள் - அரியாலை ஐக்கிய வி.க., ஜெலிஸ்ரார் வி.க.

**கபடி**

ஆண்கள் - துர்க்கா வி.க., காந்தி வி.க.

**வலைப்பந்தாட்டம்**

பெண்கள் - கொக்குவில் மத்திய சனசமூக நிலைய வி.க., துர்க்கா வி.க.

**எல்லே**

ஆண்கள் - காந்தி வி.க., துர்க்கா வி.க.

பெண்கள் - கொக்குவில் மத்திய சனசமூக வி.க., அரியாலை ஐக்கிய வி.க. (3-190)

முல்லைத்தீவு வலய பெருவிளையாட்டுக்கள் :

# மென்பந்துக் கிரிக்கெட் போட்டியில் முல்லைத்தீவு ம.வி.சம்பியனானது

முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற பெருவிளையாட்டுப் போட்டிகளில் மென்பந்துக் கிரிக்கெட் ஆட்டத்தில் முல்லைத்தீவு மகா வித்தியாலயம் சம்பியனானது.

சுனாமி அனர்த்தங்களில் இந்தப் பாடசாலை பெரிதும் சேதத்துக்குள்ளானதுடன் மாணவர்களும் பெரும் பாதிப்புக்களைச் சந்தித்திருந்தனர். இந்நிலையில், இந்தப் பாடசாலை வெற்றி பெற்றுப் பாராட்டைப் பெற்றுள்ளது.

இந்த ஆட்டத்தில் விசுவமடு மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தைப் பெற்றது.

பெருவிளையாட்டுக்களின் முடிவுகள் வருமாறு:-

**உதைபந்தாட்டம்**

17வயதுப் பிரிவு - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, கொக்குளாய் அ.த.க.பாடசாலை.

19 வயதுப் பிரிவு - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, வற்றாப்பளை ம.வி.

**வலைப்பந்தாட்டம்**

15 வயதுப் பிரிவு- கொக்குளாய் அ.த.க. பாடசாலை, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

17 வயதுப் பிரிவு - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, கொக்குளாய் அ.த.க.பாடசாலை.

19 வயதுப் பிரிவு- இரணைப்பாலை றோ.க. ம.வி, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

**எல்லே**

19 வயதுப் பிரிவு- பெண்கள் - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாசாலை.

(3-353)

# வலிகாமம் கல்வி வலயத்தில் நடந்த போட்டிகளில் வெற்றிபெற்ற அணிகள்

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள், உடற்பயிற்சிப் போட்டிகள் என்பன வலய மட்டத்தில் அண்மையில் இடம்பெற்றன.

15,17,19 வயதுப் பிரிவுகளுக்கிடையே நடைபெற்ற மேற்படிப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலை அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**வலைபந்தாட்டம்**

15வயதுப் பிரிவு

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

17 வயதுப்பிரிவு

உடுவில் மகளிர் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

19 வயதுப்பிரிவு

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.

**உடற்பயிற்சிப்போட்டி**

ஆண்கள்

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம், சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம், மானிப்பாய் மெமோறியல் நவோதய வித்தியாலயம்.

பெண்கள்

மானிப்பாய் மகளிர் கல்லூரி, நவாலி மகா வித்தியாலயம், மானிப்பாய் மெமோறியல் நவோதய வித்தியாலயம்.

(3-152)

# எல்லைப்படை மாவீரர் நினைவு உதைபந்தாட்டம்: ஒருபார்வை

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரு போட்டிகளும் சமநிலையில் முடிவடைந்தமையால் மேலதிகமாக வழங்கப்பட்ட சமநிலை உடைப்பு உதைகளே வெற்றிதோல்வியைத் தீர்மானித்த போதிலும் சமநிலை உடைப்பு உதைகளும்கூட ஐந்துக்கு மேல் உதைத்தே வெற்றிதோல்வி தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த மணற்காடு அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும் யாழ்.லீக்கைச் சேர்ந்த நீக்கிலஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

ஆட்டம் ஆரம்பமாகிய நேரம் முதல் முடிவடையும் வரை இரு அணிகளும் கோல்கள் பெறும் வாய்ப்புகள் கிடைக்கப் பெற்ற போதிலும் முதல்பாதி ஆட்டத்திலும் சரி, இரண்டாம் பாதி ஆட்டத்திலும் சரி கோல்களைப் பெற்றுக்கொள்ளவில்லை.

இந்த நிலைமை இரு அணி வீரர்களுக்கும் பெரும் ஏமாற்றமாக அமைந்ததுடன், ரசிகர்களுக்கு இடையேயும்கூட பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியது. தொடர்ந்து இரு அணிகளினதும் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக மேலதிகமாக தலா ஐந்து சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் இரு அணிகளும் தலா நான்கு உதைகளை உதைத்து நான்கு கோல்களைப் பெற்றுச் சமநிலையில் நின்றமையால் 6, 7 ஆம் உதைகளும் வழங்கப்பட்டன. இரு அணிகளும் கோல்காப்பாளரிடம் பிடிகொடுத்தும் வெளியால் அடித்தும் கோல்களைப் பெறவில்லை.

எட்டாவது உதை வழங்கப்பட்டபோது அன்ரனீஸ் விளையாட்டுக் கழக கரன் அடித்து கோலைப் பெற்றபோதிலும், சென்.நீக்கிலஸ் வீரன் வெளியால் அடித்தமையால் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் 5:4 என்ற கோல்கணக்கில் சென்.நீக்கிலஸ் விளையாட்டுக கழகத்தை வெற்றி கொண்டது.

இரண்டாவது ஆட்டத்தில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த ஸ்கந்தா ஸ்டார் விளையாட்டுக் கழகமும் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த மனோகரா விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய சுமார் பத்து நிமிடங்கள் வரை எதிரணியினரின் கோல் கம்பப் பகுதியை ஸ்கந்தா ஸ்டார் விளையாட்டுக் கழக வீரர்கள் தொடர்ச்சியாக ஆக்கிரமித்துக் கொண்டு இருந்தார்கள்.

இந்நேரத்தில் ஸ்கந்தா முன்னணி வீரர்கள் இலகுவாக கோல்களைப் பெறும் வாய்ப்புகள் கிடைத்தபோதிலும் அதனைத் தவறவிட்டமையால் ஆதரவாளர்களின் விமர்சனத்திற்கும் உள்ளாகினார்கள்.

தொடர்ந்து இந்நிலைமையை நீடிக்கவிடாது மனோகரா விளையாட்டுக் கழகத்தினர் விளையாட்டை தமது பக்கம் எடுத்துக்கொண்டு ஸ்கந்தா ஆக்கிரமிக்கத் தொடங்கினார்கள்.

விளையாட்டு சூடு பிடித்த நிலையில் மனோகரா விளையாட்டுக் கழகத்திற்கு ஒரு மூலை உதை கிடைக்கப்பெற்றது. இதனை முன்னணி வீரன் கருணானந்தன் இடதுபக்க மூலையில் வைத்து உதைக்க, அப்பந்து கோல் கம்பத்தினைக் கடந்து நின்ற கிரிதரனை நோக்கிச் செல்ல, அதனை கிரிதரன் தலையால் இடித்து கோல் கம்பத்தினுள் செலுத்தி தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

தொடர்ந்து ஆட்டம் இடம்பெற்று சில நிமிடத்தில் முதல்பாதி ஆட்டம் 1:0 என்ற கோல் கணக்கில் முடிவுற்றது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஸ்கந்தா ஸ்ரார் அணியின் ஆட்டமாக அமையும் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும், அந்நிலைமை தொடங்கியதும் ஏற்பட முடியவில்லை. ஆனாலும்கூட மனோகரா விளையாட்டுக் கழகத்தினருக்கு வழங்கப்பட்ட உதை ஒன்றை மனோகரா வீரன் அவசரப்பட்டு எதிரணி வீரன் ஒருவன் நிற்கக் கூடியதாக உதைந்தார். இந்தப் பந்து எதிரணி வீரனில் பட்டு மனோகரா விளையாட்டுக் கழகத்தின் கோல் கம்பத்தை நோக்கித் திரும்பியது.

இதனை அவதானித்த ஸ்கந்தா ஸ்ரார் முன்னணி வீரன் முகுந்தன் ஓடிச்சென்று பந்தை எடுத்து முன்நகர்த்தி வலது உள்பக்க வீரன் சதீஸிடம் கொடுத்தார். இரு அணிகளின் வீரர்களும் இந்நேரம் பந்தை சூழ்ந்துகொண்ட நிலையில் சதீஸ் ஓங்கி அடிக்க, அப்பந்து வீரர்களில் ஒருவரில் பட்டுத் திரும்ப மீண்டும் அடித்து தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

தொடர்ந்து இரு அணிகளும் விறுவிறுப்பாக விளையாடியபோதிலும் ஆட்டம் முடிவடையும் நேரம் வரை கோல்கள் எதனையும் பெற முடியாத நிலையில் தலா ஒரு கோல் என்ற சமநிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

வெற்றிதோல்வியைத் தீர்மானிக்கத் தலா ஐந்து சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் மூன்று உதைகள் மட்டும் கோலகளாக்கி இரு அணிகளும் மீண்டும் சமநிலையைப் பெற்றுக்கொண்டன. 6 ஆவது உதையினை இரு அணிகளும் வெளியால் அடித்தார்கள். 7 ஆவது உதையினை மனோகரா வி.க. கோலாக்கியபோதிலும் ஸ்கந்தா ஸ்ரார் வி.க. வீரர் வெளியால் அடித்தமையால் சமநிலை உடைப்பு உதையைத் தொடர்ந்து பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த மனோகரா வி.க. 5:4 என்ற கோல் கணக்கில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த கந்த ரோடை ஸ்கந்தா ஸ்ரார் வி.கவை வெற்றிகொண்டது. (86)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

புதிய சோபா செற்றிகள், கங்கர்கள், பாவித்த ஜெனரேட்டர்கள் (டீசல், பெற்றோல்), பேப்பர் அமர்த்தும் இயந்திரம், தட்டச்சு இயந்திரங் கள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: தகுமார சாமி. 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.(44039)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப் பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 11.04.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித் துறை, நெல்லியடிக் கிளையிலும் சுட்டி பாம் வட்டுக்கோட்டை. சந்நிதி பாம், தொண்டை மானாறு. ஐங்கரன் களஞ்சியம், திருநெல் வேலி. முருகன் - சாவகச்சேரி. நல்லூர் பாம சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (43743)

## காணியுடன் வீடு விற்பனைக்கு

பலாலி வீதியில் 1¾ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 077 6146307, 077 6696081. (44037)

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு, உப தபாலகத்திற்கு அண்மையில் கே.கே.எஸ். வீதியில் (இரண்டா வது கிணற்றுப் பங்குடன் கூடிய) இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0712-355145. (43889)

## வாடகைக்குத் தேவை

மாநகர சபைக்குட்பட்டதாகவோ அல்லது கொக்குவிலை அண்டிய பகுதியிலோ மூவர் அடங்கிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாட கைக்கு தேவை. தொடர்பு: இல.10, நவீன சந்தை மேல் மாடி, யாழ்ப்பாணம்.077 6052617 (44082)

## திருமண சேவை

சீதனம் இல்லாமல் திருமணம் செய்யா திருப்பவர்கள், கொடுத்துச் செய்யக்கூடிய வர்கள், சீதனம் கொடுக்க வசதியில்லாது திருமணஞ் செய்யாதிருக்கும் பெண்களை மனம் விரும்பி ஏற்கும் ஆண்கள். எங்களிடம் வெளிநாட்டு ஜாதகங்கள் உள்ளன. நேரிலோ, தபால் மூலமோ தொடர்புகொள்ளவும். ஸ்ரீ நாகபூசணி அம்மன் திருமண மாலை, இல. 289A, பட்டாணிச்சூர், மன்னார் றோட், வவு னியா. T.P.: 024 4588410, 0776 630207 (43302)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ, குடும்பத்தைச் சேர்ந்த, மூல நட்சத்திரம், கிரகபாவம் 14½, வயது 32, கனடாவில் பிரஜாவுரிமை உடைய மணமகனுக்கு நல்ல, படித்த, பண்புள்ள, அழ கான மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின் றனர். தொடர்பு: கு.தங்கேஸ்வரன் 'வசந்த வாசம்' ஸ்ரேசன் றோட், கொக்குவில், யாழ்ப்பாணம். (43991)

யாழ். சாவகச்சேரி இந்து கௌரவ குடும் பத்தைச் சேர்ந்த, 10 வருடங்களாக லண்ட னில் ENGINEER வேலை பார்த்து வருகின்ற, 5'5" உயரமான, செவ்வாய்க் குற்றம் இல்லாத, சித்திரை நட்சத்திரம், 31 வயது, சிவந்த மண மகனுக்கு U.K.இல் PR உள்ள, படித்த, அழ கிய மணமகள் தேவை. விளம்பர இல. 2254, மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (44086)

## எழுச்சிப் பேரவை கூட்டம்

அரியாலை,ஏப்.11

யாழ்ப்பாண மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட நிர்வாக சபை உறுப் பினர்களும் மற்றும் பிரதேச ரீதியிலான செயலாளர்களுக்குமான கூட்டம் இன்று திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட செயலகத்தில் நடைபெறும் என்று மாவட்ட செயலாளர் சூ.சிறில் அறிவித்துள்ளார். (ஐ-17)

## கூட்டுறவு ஊழியருக்கு சம்பளம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.11

நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழி யர்களுக்கு அதிகரித்த சம்பளக் கொடுப்பனவாக 2 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

புதுவருடத்தை முன்னிட்டு இம்மாதம் 9 ஆம் திகதி வழங்கப்பட்ட மாதச்சம்பளத்துடன் சேர்த்து இந்தச்சம்பள உயர்வும் வழங்கப்பட்டுள் ளது என்று கூட்டுறவுச் சங்கத் தலைவர் என். கிருஷ்ணராஜா தெரிவித்துள்ளார்.

இக்கொடுப்பனவுகளை வழங்குவதற்கான சுற்றறிக்கை வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவு ஆணைக்குழுவினால் கூட்டுறவுச் சங் கங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ஐ-203)

## வெங்காயச் செய்கை பாதிப்பு

அரியாலை.ஏப்.11


வலி. கிழக்குப் பிரதேசத்தில் வெங் காயச் செய்கையில் ஈடுபட்ட விவசாயி கள் தற்போது பெய்து வரும் கோடை மழை யினால் பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளனர்.

தோட்டங்களில் வெள்ளம் தேங்கி யதால் வெங்காயப் பயிர்கள் அழுகிப் பழுதடையும் நிலை யில் உள்ளன என்று விவசாயிகள் தெரி வித்தனர்.

அத்துடன், இம் முறை போகத்திற்கு நடப்படும் விதை வெங்காயம் கால நிலை சீரின்மை யால் அழுகிப் போவ தாகவும் தெரிவிக்கப் பட்டது.

போக வெங்கா யச் செய்கை இத னால் பாதிக்கப்படு வருவதாகவும் வெங் காயத்தின் விலை எதிர்வரும் நாள் களில் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக வும் விவசாயிகள் தெரிவித்தனர். (ஐ-17)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் ஆண்டி ஆறுமுகம்

தாரண வருஷம் பங்குனி மாதம் 12.03.2005 அன்று சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம் ஆண்டி ஆறுமுகம் அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் நேற்று (10.04.2005) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெற்றன. அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (11.04.2005) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ளன. அந்நிகழ்விலும் தொடர்ந்து நடை பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின் றோம்.

*இல. 39, 5ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.*

\- குடும்பத்தினர்.

(44080) (39-14-24)

## நடமாடும் புடைவை விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம்,ஏப்.11

கைதடி, தென்மராட்சி மேற்கு பல நோக் குக் கூட்டுறவுச் சங்கம் புதுவருடத்தை முன் னிட்டு மக்களின் நலன்கருதி மலிவு விலை யில் நடமாடும் சேவையூடாகப் புடைவை விற் பனையை நேற்றுமுதல் ஆரம்பித்துள்ளது.

சங்கப் பிரதேச எல்லைக்குட்பட்ட பகுதி களில் இந்த நடமாடும் சேவை நடைபெற்று வருகின்றது எனவும் புதுவருட தினமான எதிர் வரும் வியாழக்கிழமை வரை இச்சேவை நடை பெறும் என்றும் சங்கத் தலைவர் சி.சுப்பிரமணி யம் தெரிவித்துள்ளார். (ஐ-203)

## தேவை

பண்டகசாலைப் பொறுப்பாளர் (Store - Keeper)

க.பொ.த. சா/த தேர்ச்சி பெற்ற சுய மாகவும், சுறுசுறுப்பாகவும் வேலை செய்யக்கூடிய, அனுபவம் வாய்ந்த பண்ட கசாலைப் பொறுப்பாளர் தேவை. நற் சாட்சி விவரம் கோரக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் பெயர் விலாசத்து டன் நேரில் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:-
புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிடெட்
844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.இல.: 021 222 5780
0777 325545

(சி-42216) (39-14-24)

## தேவை

ஓட்டோ சாரதி அனுமதிப் பத்திரத்துடன் மாநகரசபை எல்லைக்கு உட்பட்டோர் தேவை.

தொடர்பு: ஏசியன் தளபாடம்
133, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(42212) T.P.: 021 222 7968 (24-14)

## CCS
## College of Computer Studies

உங்கள் கணனிகளில் ஏற்படுகின்ற திருத்த வேலைகள் அனைத்தும் உங்கள் இடத்திற்கே வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
0777 279034, 0776 104319
119, Pointpedro Road,
Nallur, Jaffna.

(44056) (24-14)

தற்போது பரபரப்பாக விற்பனையாகிக்கொண்டிருக்கிறது

## A/L வணிகக் கல்வி I

பரீட்சை வழிகாட்டி வினாப்பத்திரங்கள் 20
இவ்வினாப்பத்திரங்கள்
சிங்/கலைமொழி வினாக்கள், மாதிரி வினாக்கள்
பரீட்சை வினாக்கள், நடைமுறை விடய வினாக்கள்
என்பவற்றை உள்ளடக்கிய 800 வினாக்களைக் கொண்டது.

ஆசிரியர் - S.MUGUNTHAN.
*(Former Teacher of Zahira College, Colombo - 10)*

கிடைக்கும் இடங்கள் :
யாழ்ப்பாணத்தில் பூபாலசிங்கம் புத்தகசாலை
நெல்லியடியில் சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை
பருத்தித்துறையில் பிரியங்கா புத்தகசாலை
சாவகச்சேரியில் பொதிகை புத்தகசாலை

MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS

ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன் வைத்துள்ளார்கள்.

பதிவுகள் 15/04/2005 இற்கு முன் நேரில்

## இலவசக்கணனிப்பயிற்சி

MCS

324, பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)

Supported By UNDP/JRRP Supported By UNDP/JRRP Supported By UNDP/JRRP




புத்தாண்டு இனாம்

பிறக்கப்போகும் புதுவருடத்தை முன்னிட்டு விசேட அன்பளிப்பு எமது ஸ்தாபனத்தில் ரூபா 5000/= இற்கு மேல் கொள்வனவுசெய்வோருக்கு அழகிய பிறிண்டட் கவுன் துணி இனாம்!



## உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கு

உடற்கல்வி டிப்ளோமாப்பட்டம் பெற்று ஆசிரியர் நியமனம் கிடைத்தவர்கள் மற்றும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களை இன்று முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.பிறைற்மன் கல்வி நிலையத்தில் ஒன்று கூடுமாறு உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.(எ)


**BARATHY**
சித்தன்கேணி

சிறந்த ஆசிரியர் தெரிவே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்.
எங்கு பிரபல்யம்மிக்க ஆசிரியர்கள்.
எது சிறந்த நிறுவனம்.
நீங்களே தெரிவு செய்யுங்கள்

**A/L 2007**

காலை - வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்: இன்று திங்கள் - 3.00 மணி
யாழ்.தலைசிறந்த ஆசிரியர் குழுவினால்

பொருளியல் - மகேந்திரன்
கணக்கீடு - முகுந்தன்
வணிகக்கல்வி- பசில்
தமிழ் - பாலா
அளவையியல் - R.P. சர்மா
இந்துநாகரிகம் - சுரேஸ்
இந்து சமயம் - தரன்
புவியியல் - குமரன்
அரசியல் - றஜீவன்
வரலாறு - பத்மன்
கிறிஸ்தவம் - வசந்தன்
நாட. அரங்கியல் - சுதன்
அனுமதியினை பெற்றுக்கொள்ளவும்.
(44103)(38-11-17)

**BARATHY**
சித்தன்கேணி

அதி உயர் பெறுபேறு பெற்ற மாணவர்களை வாழ்த்தி இது போல நீங்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிட

**O/L DAY CLASS**

புதிய பிரிவு ஆரம்பம் 11-04-2005 காலை 8மணி. எமது தனித்துவமும் அதிதிறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினர்
விஞ்ஞானம் - தேவா
கணிதம் - எஸ்.சிவரூபன்
தமிழ் - குகபரன்
- தமிழ்மாறன்
சமூகக்கல்வி - சுதன்
ஆங்கிலம் - விஜயபாஸ்கர்
சமயம் - தரன்
வர்த்தகம் - லோகேஸ்வரன்
விவசாயம் - பிரபல ஆசிரியர்
(44103)(38-11-17)

குறிப்பு:- மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் இப்பிரதேசத்தில் வேறு எந்த கல்வி நிறுவனத்திலும் கற்பிக்க மாட்டார்கள்.

சென்ற ஆண்டு போல இம்முறையும் 90 மாணவர்களுக்கு மட்டும்தான் அனுமதி வழங்கப்படும். அனுமதிகளை முற்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.


## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி நகரசபை ஊழியர் நலன் புரிச்சங்க உறுப்பினரும் சாவகச்சேரி நகரசபை ஊழியருமான

**சங்கரப்பிள்ளை வரதராசா**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த கவலையையும் கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துவதுடன், அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
(C/42243)(17-11-38)
சாவகச்சேரி நகரசபை,
ஊழியர்நலன்புரிச் சங்கம்.




(C-42241)

**த பினான்ஸ் கொம்பனி லிமிட்டெட்**

65 வது ஆண்டு நிறைவை கொண்டாடும் முகமாக மலரும் தமிழ் ~ சிங்கள புதுவருடப்பிறப்பை முன்னிட்டு உங்கள் நிலையான பண வைப்பிற்கு

**1% கைவிசேட பணக் கொடுப்பனவு!**

ஏப்பிரல் மாதம் 14ந் திகதியிலிருந்து 30ந் திகதி வரை வழங்கப்படும்.

த பினான்ஸ் கொம்பனி லிமிட்டெட்
இல.173, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே - 021-222-6256, தொ.நகல் : 021-222- 2310

வியாபார சேவை நிலையங்கள்
இல.36, பிரதான வீதி, நெல்லியடி இல.19 கச்சாய் வீதி, சாவகச்சேரி
இல.50,1/5 கொழும்பு பிளாஸா காலி வீதி, வெள்ளவத்தை

65 2005

**படிவம்**

பட்டதாரி வேலைவாய்ப்புக்கு விண்ணப்பிப்பதற்கான ஆறுவகைப் படிவங்கள் உண்டு. திங்கட்கிழமை நண்பகல் முதல் பெற்றுக்கொள்ளலாம்.
BHARATHY PATHYPPAKAM,
430, K.K.S. ROAD, JAFFNA.

**தேவை**

மில் வேலையில் அனுபவம் உள்ளவரும் உதவியாளரும் தேவை.
தொடர்பு: பிருந்தா மில்ஸ்
N-18, நக்கா றோட்,
யாழ்ப்பாணம்.
Tele - 5745
(44100)(38-11-17)

**நிறைஞ்சனாஸ் சங்கானை**

விஜய், நமீசா, ரவிகிருஷ்ணா நடிப்பில்
சச்சின்
கா.நேரம்: 11.00. 2.45. 6.00. (பு.நே)
(C/41377)(20-16-17)

**யாழ்ப்பாணம்**

கருணாஸ், ரிச்சா, ரகுவரன் நடித்த
கையோடுகை
(ரீல்ஸ்) காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும்
14 முதல் கமலஹாசன், மனீஷா நடித்த
மும்பை எக்ஸ்பிரஸ்
இலங்கை, இந்திய ஒரே தின வெளியீடு.
(C/41381)(20-16-17)

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**

அஜித், த்ரீசா நடித்த
ஜீ
தினசரி:- 11.00. 3.00. 7.00 (பு.நே.) (ரீல்ஸ்)
புதுவருட வெளியீடாக றஜனி நடித்த



ஆசனப்பதிவுகளுக்கு இன்றுமுதல்
★ நாகம்ஸ்பாட்டா.
10. நவீன சந்தை. சுன்னாகம்.
★ யாழ்.பெயின்ற் காடின்.
கே.கே.எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.
(முட்டாஸ்கடைச்சந்தி).
(C/41380)(20-16-17)

**யாழ்ப்பாணம்**

பார்த்திபன், காவேரி,
மாஸ்டர் அஸ்வின் நடித்த
கண்ணாடி பூக்கள்
காட்சி நேரம்: 10.30, 2.30. (ரீல்ஸ்)
6.30, 9.30 இற்கு மட்டும்
தனுஷ், ஸ்ரீதேவி, கருணாஸ் நடித்த
தேவதையைக் கண்டேன்
(C/41378)(20-16-17)


## பங்குனித் திங்கள் கடைசி உற்சவம்

மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்தில் நடைபெற்று வரும் பங்குனித் திங்கள் உற்சவத்தின இறுதி நாள்வழிபாடுகள் இன்று நடைபெறவுள்ளன.

குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் இருந்து பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் இன்று ஆலயச் சூழலில் ஒன்று கூடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது ஆலயத்திற்கு வருகைதரும் பக்தர்கள் குறிப்பாக பெண்கள் தங்க நகைகள் அணிவதை முடிந்தவரை தவிர்க்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ)


**2007 A/L**
★கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான, ஆங்கில வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன.
★Yr. 2 முதல் 11 வரை
★புலமைப்பரிசில் Yr. 5
(ஞாயிறு பரீட்சை)
SHAMROCK
J/ஈச்சமோட்டை
(44057)(38-11-17)

**கணக்கீடு**
S.சயந்தன்
A/L 2006
பங்குடமை
ஆரம்பம் -
11.04.2005
MON - 4.30 p.m.
Wed., Fri. - 4.30 - 6.00
நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(44066)(38-11-17)


# எல்லைப்படை மாவீரர் நினைவு உதைபந்தாட்டத்தில் நேற்று

வலி.வடக்கு,ஏப்.11

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவுடனும் உதயன் ஊடக அனுசரணையுடனும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் நேற்றைய ஆட்டங்களில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகமும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகமும் வெற்றிபெற்றன.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வட்டக்கச்சி லக்கிஸ்டார் விளையாட்டுக்கழகத்திற்கும் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல்கணக்கில் கரணவாய் மத்தி விளையாட்டுக்கழகத்தை வெற்றி கொண்டது.

இரண்டாவது ஆட்டத்தில் யாழ்.லீக்கைச் சேர்ந்த யாழ்ப்பாணம பல்கலைக்கழக விளையாட்டுக்கழகமும் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டதில் இரு அணிகளுமே கோல்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க வழங்கப்பட்ட சமநிலை உடைப்பு உதையைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 3:2 என்ற கோல் கணக்கில் யங்கென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டது.

(எ-86)


**நாதன்ஸ் சினிமா**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு தாவடிமைந்தன் ஜெய்ஆகாஷ், பிரணதி, நாசர், தாமு, வையாபுரி நடித்த
குருதேவர்
கா.நேரம்: 10.30. 2.30. 6.30. 9.30 (பு.நே.)




# மரண அறிவித்தல்கள்

## செல்வநாயகம் சாந்தகுமார்

(முன்னாள் ஊழியர் இ.போ.ச.)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் ஹொலண்டை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் சாந்தகுமார் அவர்கள் 01.04.2005 வெள்ளிக்கிழமை ஹொலண்டில் காலமானார்.

அன்னார் புஸ்பராணியின் (கொழும்பு) அன்புக் கணவரும் நிசாந்தனின் பாசமிகு தந்தையும் சுப்பிரமணியம் - மாமணிதேவியின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற செல்வநாயகம் - நாகரட்ணத்தின் அன்புப் புதல்வரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.04.2005) திங்கட்கிழமை ஹொலண்டில் அடக்கம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாவடி தெற்கு,*
*கொக்குவில்.*
(44094)(38-11-17)

தகவல்:
சுப்பிரமணியம் குடும்பம்,
லோகேஸ்வரன் குடும்பம்,
சிவகுமார் குடும்பம்.

## சங்கரப்பிள்ளை வரதராசா

(நகரசபை, சாவகச்சேரி)



கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை வரதராசா அவர்கள் நேற்று (10.04.2005) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - சடைப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற அம்பலவாணர் - பறுவதம் தம்பதிகளின் அன்பு மருமகனும் புனிதவதியின் அன்புக் கணவரும் விஜிதன் (கனடா), கஜிதன் (கனடா), கலக்சனா (மாணவி - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் இராஜேஸ்வரி, சண்முகராசா, காலஞ்சென்ற பாலசிங்கம், யோகேஸ்வரி (சுவிஸ்), சிறிஸ்கந்தராசா (லண்டன்), புஸ்பராசா (லண்டன்) ஆகியோரின் அருமைச் சகோதரனும் சிற்றம்பலம் (சுவிஸ்), திலகவதி (கொழும்பு), சண்முகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.04.2005) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தலடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்நிதி இல்லம்,*
*கைதடி கிழக்கு,*
*கைதடி.*
(44095)(38-11-17)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
T.P.: 0602 213226

## இலகுப்பிள்ளை அருட்செல்வம்

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, கல்கிசையை வசிப்பிடமாகவும் கொண்ட இலகுப்பிள்ளை அருட்செல்வம் அவர்கள் 09.04.2005 சனிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இலகுப்பிள்ளை - செல்லம்மாவின் பாசமிகு மைந்தனும் காலஞ்சென்றவர்களான நடராசா-பாக்கியம் தம்பதியினரின் மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ரஜித்தா, ரஜீசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நரேஸ், கவிதா ஆகியோரின் மாமனாரும் டியோனின் பாசமிகு பேரனும் தவமணிதேவி, பஞ்சலிங்கம், காந்திமலர், வசந்தாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கந்தசாமி, சறோஜினிதேவி, காலஞ்சென்ற சண்முகநாதன், அருளானந்தம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (11.04.2005) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.15/2, வித்தியாலய வீதி,*
*ஓப் (F) டெம்பிளர்ஸ் வீதி,*
*கல்கிசை.*
*தொ.பேசி:-011 - 4205807*

தகவல்:
சு. அருளானந்தம்
(மைத்துனர்).
(44098)(38-11-17)



வடமராட்சி சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தினர் அன்னை பூபதி நினைவாக நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அண்மையில் சிரமதானம் ஒன்றை மேற்கொண்டனர். இதன்போது எடுக்கப்பட்ட படங்கள். (எ-70)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் விசேட உரை நிகழ்த்துவர்.

கூட்டத்தின் பின்னர் ஜனாதிபதிக்கான மகஜர் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் சர்வதேச பிரதிநிதிகளிடமும் கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-14)

## புலிகளின் சாவடியை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை அவர்கள் சென்றுள்ளனர். திடீரென அவர்களைச் சுற்றிவளைத்த ஆயுததாரி கள் சிலர் துப்பாக்கிமுனையில் தடுத்து வைத்தனர்.

மஹிந்தபுர இராணுவ முகாமின் பின்புறமாகவே தாங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள் என்று அவர்கள் தெரிவித்தனர். தம்மைத் தடுத்து வைத்திருந்த ஆயுததாரிகள் இரவு 8 மணியளவில் முகாம் வேலியருகாகத் தம்மை முன்னே போகவிட்டு பின்னே நகர்ந்தனர் என்று அவர்கள் கூறினர்.

இது குறித்து அவர்கள் தெரிவித்ததாவது-

அந்த ஆயுதக்குழுவில் 9பேர் இருந்தனர். அவர்களில் மூவர் இராணுவச் சீருடையில் காணப்பட்டனர். சிங்கள மொழியில் மட்டுமே பேசினர். மற்றைய 6 பேரும் சாதாரண உடையில் இருந்தனர்.

இரவோடு இரவாக நகர்ந்த அவர்கள் விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடியின் பின்புறமாகப் பதுங்கியிருந்தார்கள். அதிகாலையில் எம்மை விரட்டி விட்டு புலிகளின் சாவடி மீது தாக்குதல் நடத்தினர் என்றனர்.

இந்த இருவருமே போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் முன்னிலையில் நேற்று சாட்சியமளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. எனினும் அது நேற்று நடைபெறவில்லை.

## ஏறாவூர் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த விசாரணைகளைத் தாம் மேற்கொண்டு வருகின்றனர் என ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட அப்துல் ஹமீட் ரஹுமத்துல்லா (ரகுமான்) என்ற 29 வயதுடைய முஸ்லிம் குடும்பஸ்தர் ஆரம்ப விசாரணைகளின் பின்னர் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிவான் எம்.எச்.எம்.அஜ்மீர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். அவரை 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

தமிழ் ஆயுத வியாபாரி ஒருவர் இந்த ஆயுதத்தையும் தோட்டாக்களையும் ஐயாயிரம் ரூபாவுக்குத் தமக்கு விற்றார் என்று இந்த இளைஞர் பொலீஸாரிடம் தெரிவித்தார் எனக் கூறப்படுகின்றது. (எ-க)

## திருநகரில் காயமடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரைவழிப் பாதை வழியாக அவரை நகர வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கான அனுமதியைப் பெற்றுத்தருமாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் புலிகள் கோரினர்.

இது குறித்துக் கண்காணிப்புக் குழுவினர் இராணுவத்தினருடன் பேசினர். தமது வழித்துணையுடனேயே அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முடியும் என்றும், இரவு நேரத்தில் வழித்துணை வழங்க முடியாது என்றும் இராணுவத்தினர் தெரிவித்தனர் என்று கூறப்படுகிறது.

எனினும் அவரது உடல் நிலையைக் கருத்தில்கொண்டு அவரை உடனடியாக நகர வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டியிருக்கிறது என்று படையினருக்கு விளக்கமளிக்கப்பட்டது. பெரும் இழுபறியின் பின்னர் இராணுவத்தினர் அனுமதியளித்தனர்.

உடனடியாக போராளிகளால் அவர் கட்டைப்பறிச்சான் இராணுவ சோதனை நிலையத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டார். ஆனால், நகருக்குள் அவர்களை அனுமதிப்பதற்கு அங்கிருந்த இராணுவத்தினர் பின்னடித்தனர். அனுமதி வழங்க மறுத்தனர்.

புலிகள் இது பற்றி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டனர். அவர்கள் மீண்டும் இராணுவ அதிகாரிகளுடன் பேசினர். கண்காணிப்புக் குழுவினரின் வழித்துணை இருந்தால் தான் காயமடைந்தவரை அனுமதிக்க முடியும் என்று அப்போது இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன் பின்னர் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்ட மாவட்ட அதிகாரிகள் வழித்துணையாகச் செல்வதற்கு அனுமதி பெற்றனர்.

ஆனால், அதன் பின்னரும் படையினர் முட்டுக்கட்டை போட்டனர். காயமடைந்தவரை மட்டுமே நகருக்குள் அனுமதிக்க முடியும் என்றும் பேராளிகளை அனுமதிக்க முடியாது என்றும் படையினர் மீண்டும் முரண்டு பிடித்தனர். காயமடைந்தவரின் நிலை மோசமாக இருந்த நிலையில் அவரை துணைக்கு யாரும் இன்றி அனுப்பப் புலிகள் மறுத்துவிட்டனர்.

இத்தனை இழுபறிகளின் பின்னர் இரவு 10 மணியளவில் படையினர் அனுமதியளித்தனர். ஆனால், அப்போது கடும் மழை பெய்து கொண்டிருந்ததால் காயமடைந்த துணைப்படை வீரர் மீண்டும் சம்பூருக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்த விவகாரத்தில் நேற்றுக் காலை தலையிட்ட செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் இராணுவத்தினருடன் பேசி அனுமதி பெற்று காயம்பட்டவரை நேற்றுப் பிற்பகல் திருகோணமலை நகர வைத்தியசாலைக்கு அழைத்து வந்தனர். (எ-3)

## தில்லைக் கூத்தனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைப்பாட்டில் எந்தத் தளர்வும் இன்றி உறுதியாக நின்று தமிழ்த்தேசியத்தின் பக்கம் குரல் கொடுத்தவர் தில்லைக்கூத்தன்.

தனது வாழ்களத்தைப் பொருட்படுத்தாமல் தமிழின விடுதலையை விரும்பி, அதனை மதித்து, அதற்காக தனது எழுத்தையும் பேச்சையும் செயற்பாடுகளையும் ஒழுங்கமைத்து இயங்கிவந்தார் இவர்.

தமிழர் தாயகத்தை திட்டமிட்டு சிங்கள ஆட்சியாளர்கள் சிதைக்க முற்பட்டபோதெல்லாம் தில்லைக்கூத்தன் அவர்களின் எழுத்துக்கள் அதனை வன்மையாகக் கண்டித்தன. அதே வேளையில், தமிழினத்தை விழிப்பூட்டி எதிரி மீதான எச்சரிக்கையையும் கவனத்தையும் ஏற்படுத்தியது இவருடைய பேனா. இதற்கு இவருடைய கட்டுரைகளும் நூல்களும் சாட்சியாக இருக்கின்றன.

சிறந்த கல்வியாளராக இருந்த தில்லைக் கூத்தன் அவர்கள் தமிழீழத் தேசியத் தலைவர் மீது பற்றும் மதிப்பும் கொண்டு அவருடைய தலைமையில் தனது விடுதலைப் பணியை மகிழ் வோடும் பெருமையோடும் தொடர்ந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழ்மக்களின் பிரச்சினையையும் தமிழீழ போராட்டத்தையும் உலக அரங்கில் எடுத்துச் செல்வதிலும் தில்லைக் கூத்தன் தீவிரமாக உழைத்தார்.

தனது முதுமைக்காலத்திலும் கூட அவர் எந்தச் சோர்வுமின்றி தனது தமிழ்த்தேசிய நிலைப்பாட்டில் நின்று ஒரு தந்தைக்குரிய அரவணைப்போடும் உரிமையோடும் தனது பங்கையும் பலத்தையும் வழங்கினார்.

எல்லோரையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைத்து போராட்டத்தைப் பலப்படுத்துவதில் அக்கறை கொண்டிருந்த தில்லைக்கூத்தன் அவர்களை தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாம் நாட்டுப்பற்றாளராக கௌரவித்துள்ளோம்.

இத்தகைய பெருமைகளுக்கும் மதிப்புக்குமுரிய பற்றாளர் தில்லைக்கூத்தன் அவர்களுக்கு எமது இறுதி வணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாட்டுப்பற்றாளர் தில்லைக்கூத்தன் அவர்களின் குடும்பத்தாருடைய துயரில் தமிழீழ மக்களுடன் நாமும் பங்குகொள்கிறோம்- என்று அதில் உள்ளது. (எ-12)

(மற்றொரு செய்தி 3ஆம் பக்கத்தில்)

## மூதூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட உப தலைவர் ஹெல்கே, அதிகாரியான அல்வ் ஆகியோர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு நேற்றுச் சென்றனர்.

சம்பூரில் உள்ள விடுதலைப்புலிகளின் அலுவலகத்தில் அவர்கள் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தினர்.

இப்பேச்சுக்களின் பயனாக சிறிவர்த்தன என்ற அந்தச் சிப்பாயை புலிகள் விடுவித்தனர்.

அவர் வசம் இருந்து மீட்கப்பட்ட துப்பாக்கி, 30 சன்னங்கள், திசையறி கருவி ஆகியவற்றைப் புலிகள் பறிமுதல் செய்தனர். (எ-3)


IIS

கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

16-04-2005 / 18-04-2005 } பகல் 10.00 மணி

அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான வார, வார இறுதிப் பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன என்பதை அறியத்தருகிறோம்.

இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.

(சி-42180)(33-16-17-34)

BARATHY

சித்தன்கேணி

மீண்டும் சித்தன் கேணி மண்ணில்
பொருளியல்
மகேந்திரன்
A/L 2006
★ பேரினப் பொருளாதாரம்
பகுதி II
பணம், வங்கி, விலைமட்டம்.
ஆரம்பம்
11.04.2005 - பி.ப.3.00மணி.

வெள்ளி விழாக்காணும்
சதீஸ் ஒலிப்பதிவுக் கலையகத்தில்
புத்தாண்டு மலிவு விற்பனை
★ ஓடியோ CD, ★ வீடியோ CD, ★ MP3
★ DVD மற்றும் அனைத்து வகையான ஓடியோ க்செட் வகைகள்.
★ குறுகிய நேரத்தில் குறைந்த செலவில் நீங்கள் விரும்பும் பாடல்களை CD, கசெட்டில் பெற்றுக்கொள்ள
சதீஸ் ஒலிப்பதிவுக் கலையகம், பஸ்நிலையம் முன்பாக, J.M.C கட்டடம், யாழ்ப்பாணம்.

அராலி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு யாழ்.குடாநாட்டு விளையாட்டு வீரர்களுக்கான போட்டிகள்.

★ மரதன் ஓட்டப்போட்டி - 5 மைல் (ஆண்கள்)
★ சைக்கிள் ஓட்டப்போட்டி - 20 மைல் (ஆண்கள்)
★ மெதுவான மோட்டார் சைக்கிள் ஓட்டம்

ஆகிய போட்டிகள் 13.04.2005 புதன்கிழமை காலை 6 மணிக்கு சனசமூக நிலைய முன்றலில் ஆரம்பமாகும். போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் முற்கூட்டியே சனசமூக நிலைய செயலாளரிடம் பதிவுகளைச் செய்யலாம்.

குறிப்பு: வருடப்பிறப்பன்று நடைபெறும் நிகழ்ச்சிகள் யாவும் சுனாமி அனர்த்தம் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

-நிர்வாகம்.

(42244)(38-11-17)

மாணவர் தேவைக்கேற்ப
இதோ மற்றொரு தொகுதி...!
A/L தமிழ் வினாவிடைகள்
திருவடி சூட்டுப் படலம்
பதிப்பு II
திரு.நாக.தமிழிந்திரன்
BEACON - யாழ்.பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, அறிவமுது (கிளி), புத்தகசாலைகள்.
புத்தாண்டுத் தள்ளுபடியைக் கேட்டு வாங்குங்கள்.
NOTE: வகுப்பு நேரம் ~~90~~ நிமிடமல்ல 60 நிமிடம்.

D.C.M.
A/L 2007 பிரிவு 02
கலை வித்தகம்
ஆரம்பம்:
16 ஏப்ரல் 2005 - சனி காலை 7.00 மணி
D.C.M.

IIS CITY CAMPUS
MBA
( Master of Business Administration )

Manipal பல்கலைக்கழகத்தின் மேற்படி கற்கை நெறி எமது நிறுவனத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. யாழ். குடாநாட்டில் பயில விரும்புவோர் அல்லது கற்கைநெறி தொடர்பாக ஆர்வம் உடையோருக்கான கருத்தரங்கு ஒன்று நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கருத்தரங்கில் பல்கலைக்கழகத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இடம்: IIS பிரதான மண்டபம்
#100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: 16.04.2005
மாலை 03.00 மணி

ஆர்வமுடையோர் பங்கு பற்றிப் பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

மேலதிக விபரங்களுக்கு :
Mrs. Chelvy Suntheresen, Centre Manager
T.P : 021 222 8060

Director
IIS, City Campus,
# 181, Navalar Road, Jaffna.

ஏசியன்
தளபாட நிலையம்
ஆர்ப்பிக்கோ, தம்ரோ, நீல்கமல் கதிரைகள், மெத்தைகள் மற்றும் அலுவலகத் தேவைக்குரிய அனைத்துப் பொருள்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
கிச்சின் கபேட் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும் (பன்றிக் கபேட்)
133, மின்சார நிலைய வீதி, பஸ்நிலையம் அருகில், யாழ்ப்பாணம். T.P: 0777 536108


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.